Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

உலகில்
215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும்,
50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய



FedEx
Express®

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பிட

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

(சி-13509)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை–29 | 14–12–2005 | புதன் கிழமை | ஓசை–300

# குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் சிறிலங்காப்படையினர் தேடுதல்!

## வீடுகளுக்குள் புகுந்து சல்லடை போட்டனர்

(யாழ்ப்பாணம்)

*யாழ். குடாநாட்டில் நேற்றும் சிறிலங்காப்படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது படையினர் வீடுவீடாக சல்லடைபோட்டுத் தேடினர். இந்த நடவடிக்கையில் ஒரு இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

கொக்குவிலில் நேற்று முற்பகல் சிறிலங்காப்படையினர் பாரிய சுற்றி வளைப்புத்தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். முற்பகல் 11.00 மணியிலிருந்து பிற்பகல் 12.30மணி வரை இச் சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது வீடுகளில் புகுந்த சிறிலங்காப் படையினர் மக்களை வெளியே வரவழைத்துக் கடுமையான விசாரணைகளுக்குட்படுத்தியதோடு வீடுகளினுள்ளும், சல்லடை போட்டுத் தேடுதல் நடாத்தியுள்ளனர். இந்த நடவடிக்கையின் போது இளைஞர் ஒருவரையும், படையினர் கைது செய்துள்ளனர்.இவர் பின்னார் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே யாழ்ப்பாணம், பலாலி பிரதான வீதியில் உள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திர காய்நகர்த்தலில் தலைவர் பிரபாகரன் மாமேதை

### - நக்கீரன் இதழில் வைகோ

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு இராஜதந்திர மாமேதை என்று தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் நக்கீரன் வாரம் இருமுறை இதழில் அவர் வழங்கியுள்ள செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

பிரபாகரன் அவர்கள் அமைதி நடவடிக்கைகளுக்கு டிசம்பர் 31 இற்கு காலக்கெடு வைத்துள்ளது பற்றி தங்கள் கருத்து என்ன எனப் கேட்கப்பட்டதற்கு, போர் முனையில் காய்களை நகர்த்துவதைப் போலவே இராஜதந்திர முனையிலும் காய் நகர்த்துவதில் மாமேதை என்பதை பிரபாகரன் நிரூபித்துள்ளார் என்று வைகோ தெரிவித்துள்ளார்.

## குடாநாட்டில் படையினரின் மக்கள் மீதான நெருக்குவாரங்கள் கவலை தரும் செயல்

### -மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.குடாநாட்டில் வாழும் மக்களின் நலன்கள்,மனிதஉரிமைகள் எதனையுமே கருத்தில் கொள்ளாது வெறுமனே இராணுவத்தின் நலன்களை மாத்திரம் கருத்திற்கொண்டு மக்கள் மீது இராணுவ நெருக்குவாரங்களை ஏற்படுத்துவது கவலை தரும் செயல். இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் பளை அரசியல்துறை செயலகத்தில் வைத்து யாழ்.குடாநாட்டின் நிலைமைகள் பற்றி விளக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் யாழ்.குடாநாடு அண்மைக்காலமாக இராணுவ நெருக்குவாரங்களுக்கு உள்ளாகி வருகின்றது. அங்கு வாழும் மக்கள் சுற்றிவளைப்புக்கள் கைதுகள் செய்யப்படுகின்றமை, மற்றும் திடீர் விசாரணைகள் என்பவற்றிற்கு முகம் கொடுக்கவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகர்ப்பகுதியில் படையினர் பாரிய தேடுதல்

(வவுனியா)

நேற்றுக்காலை முதல் வவுனியா நகரப்பகுதி சிறிலங்கா படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையில் சிறிலங்காப் படையினரும் பொலிசாரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

வவுனியா நகர்வீதி, பஸ்நிலையம்,கடைவீதி, தர்மலிங்கதம்வீதி, புதுக்குளம், சாஸ்திரி கூளாங்குளம் போன்ற பகுதிகளிலேயே சுற்றிவளைப்பு, வீதிச்சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றிவளைப்பில் ஈடுபடும் படையினர் ஆள்அடையாள அட்டையை பரிசோதிப்பதுடன் யுத்த காலத்தில் வழங்கப்பட்ட இராணுவத்தினரின் அடையாள அட்டையையும் கோரிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் படையினருடன் முன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அசாதாரண சூழ்நிலையை ஆராயும் பொருட்டு அமெரிக்க மூத்த இராஜதந்திரி வருகை

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், அண்மையில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகள் என்பன தொடர்பாக ஆராயும் பொருட்டு மூத்த இராஜதந்திரி ஒருவரை விரைவில் சிறிலங்காவிற்கு அனுப்பிவைக்க அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதற்காக அனுபவம் வாய்ந்த இராஜதந்திரியும், தெற்காசியா தொடர்பில் ஆழமான அறிவு கொண்ட நிக்பேர்ண்ஸ் அடுத்தமாத முற்பகுதியில் கொழும்புக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பு வரும் இவர் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்திக்கவுள்ளார். இவர் இறுதியாக சிறிலங்காவின் தற்போதைய நிலைமைகள் குறித்து அமெரிக்க அரசுக்கு அறிக்கை ஒன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவக்கட்டமைப்பில் இராணுவத் தளபதியால் பல மாற்றங்கள்!

(கொழும்பு)

சிறிலங்கா படைக் கட்டமைப்பில் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவினால் பல மாற்றங்களை செய்யப்பட்டுள்ளன. பல சிறிலங்கா இராணுவ அதிகாரிகளின் பணிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இராணுவ தொண்டர் படைத்தளபதியாக மேஜர் ஜெனரல் எஸ். குலதுங்கநியமிக்கப்பட்டுள்ளார். சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறை இயக்குநராகப்பணியாற்றிய பிரிகேடியர் ஆர்.சக்தி யாழ்.இராணுவ கட்டளை தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். தலைமை பாதுகாப்பு பிரிவு ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றிய பிரிகேடியர் ரி.லியனகே சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறை இயக்குநராக நியமிக்கப்பட்டார் சிறிலங்கா இராணுவப் பேச்சாளராக இருந்த பிரிகேடியர் தயாரட்நாயக்க 23 ஆம் படைப்பிரிவு கட்டளைத் தளபதியாகவும், சிறிலங்கா இராணுவப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலிவிமானத்தள விஸ்தரிப்பு, கூட்டுப்பயிற்சி இந்திய பாதுகாப்பமைச்சரிடம் வைகோ கவலை!

சிறிலங்கா - இந்திய இராணுவங்கள் இணைந்து கூட்டுப்பயிற்சியில் ஈடுபடுவது தொடர்பாகவும் பலாலி விமானத்தளத்தைச் சீரமைப்பது தொடர்பாகவும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழ்நெற் இணையத் தளத்துக்கு வைகோ அளித்துள்ள கருத்தில் தெரிவித்துள்ளதாவது ;

யாழ்.பலாலி விமானத்தளத்தை சீரமைப்பது தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளியானது குறித்து எனது கவலையை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகாஜியிடம் திங்கட்கிழமை தெரிவித்தேன்.

இந்தச் செய்திகள் குறித்து தான் ஆராய்ந்து வருவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்தியத் தலைவர்களிடம் தமிழர்களின் கவலை குறித்து நான் தெரிவித்த போதெல்லாம் சிறிலங்காவுடன் இராணுவ ஒப்பந்தத்தையோ இராணுவ நிலைகளின் மறுசீரமைப்புத் திட்டங்களையோ அவர்கள் நிராகரித்தே வந்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா கடற்படை அச்சுறுத்தல்

கடற்றொழிலுக்குச் சென்றவர்களை தொழில்செய்ய விடாது சிறிலங்கா கடற்படையினர் அச்சுறுத்தியுள்ளனர். இதன் காரணமாகத்தொழிலாளர்கள் அச்சத்துடன் கரை திரும்பியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; நேற்றுக்காலை 11.30 மணிக்கு முல்லைத்தீவு. கள்ளப்பாட்டைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடலில் வலைகளைப் போட்டுவிட்டு நின்றபோது சிறிலங்கா கடற்படையினர் ஆகாயத்தை நோக்கி பல தடவை சுட்டுள்ளனர். இதன் காரணமாக தாம் தொழில் செய்ய முடியாது கரை திரும்பியதாக கள்ளப்பாட்டைச் சேர்ந்த வாமதேவன் (வயது-62),ஜெயக்குமார் (வயது-36) என்பவர்கள் தெரிவித்தனர். (20)

## சிறுமியைக் கடத்த முயன்ற சிப்பாயின் முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்றுக் காலை சிறுமிஒருவரை55ஆவது படையணிச் சிப்பாயால் பலவந்தமாக கடத்திச்செல்லப் பட்டவேளை சிறுமி அவலக் குரலெழுப்பியதையடுத்து அப்பகுதியில் மக்கள் திரண்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இருவர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு கிரான் பறங்கியாமடுவில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களின் வீட்டுக்கு வந்த இனந்தெரியாத நபர்கள் இவர்களை அழைத்துச் சென்று பறங்கியாமடு பாடசாலைக்கு அருகில் வைத்து சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலையுண்டவர்கள் கந்தசாமி சந்திரன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
இணையத்தளங்களை உருவாக்கக் கூடிய உயர்கற்கை நெறி
**Dreamweaver MX**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி
(சி.13074)

### இறப்பர் முத்திரை

பொலிமர் இறப்பர் முத்திரை உடன் செய்து பெற்றுக்கொள்ளநாட வேண்டிய இடம் வாணி புத்தகசாலை (பிக்பென்ஸ்) கனகபுரம் டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி-13264)

### தவறிவிட்டது

சாதாசிவம் -இந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை பரந்தன் -முல்லை வீதியில் (தே.அ.அ.இல 633513260V) தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உடையார்கட்டு தேவமதி வாணிப நிலையத்தில் ஒப்படைத்து உதவவும். (6442)

## காலநிலை சீரின்மையால் பயிர்களில் பூச்சி தாக்கம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலநிலை சீரின்மை காரணமாக விவசாயப் பயிர்கள் பூச்சித் தாக்கங்களுக்குள்ளாகி வருவதாக முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகிலதாசன் தெரிவித்துள்ளார். அண்மையில் வயல்நிலங்களில் அவதானித்ததன்படி கபிலநிறத் தண்டுத்தத்தித் தாக்கம், இலைச் சுருட்டி, சந்துக்குத்தி, இலைமடல் வெளிறல் போன்ற தாக்கங்கள் அவதானிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மேலதிக விபரங்கள் தேவைப்படின் அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியர்களை அணுகுமாறும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# சோளம் சோயா மா விநியோகம்; பயன்பாடு குறித்தும் விளக்கம்

(மல்லாவி)

முல்லை மாவட்ட துணுக்காய் பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைக்கு உலக உணவுத்திட்டத்தின்கீழ் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சோளம் சோயா மா வகைகளை தாய் சேய்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த வகையில் வழங்கப்படும் சோளம் சோயா மா வகைகளை சிலர் உரிய முறையில் பயன்படுத்தாது இருந்தும் வந்துள்ளனர். இதன்போது மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைத் தொண்டர்களால் கிராமங்கள்தோறும் சென்று இச் சோளம் சோயா மாவின் பயன்பாட்டையும்,செய்முறைப்பயிற்சியையும் காண்பித்து வருகின்றனர். இதன்போது தேறாங்கண்டல் பகுதியில் 30இற்கு மேற்பட்ட குடும்பத்தினருக்கு பொது நோக்கு மண்டபத்தில் காலை ஒன்பது மணிக்கு சமைத்துக் காட்டப்பட்டது. இவ்வகை சோளம் சோயா மாவில் பழங்கள் மரக்கறிகளுடன் சேர்த்து கஞ்சிபோன்ற உணவு வகைகளையும் சீனி, எண்ணெய் என்பவற்றுடன் சேர்த்து ரொட்டி உப்புமா, தோசை, வடை,பிட்டு போன்றவற்றை தயாரித்துத் தொண்டர்களால் காட்டப்பட்டன.

100கிராம் மாவானது 380 கலோரி சக்தியையும் 15.5கிராம் புரதத்தையும் வழங்கக்கூடியது.

இது போன்று செய்முறைப்பயிற்சிகள் பல கிராமங்களில் இடம்பெறவுள்ளன.பாரதிநகர், தென்னியங்குளம் யோகபுரம் மத்தி, யோகபுரம் மேற்கு ஆரோக்கியபுரம், அம்பலப் பெருமாள் குளம் அனிஞ்சியன்குளம்,கல்விளான் ஆகியபகுதிகளில் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (24)

## நாவற்காடு விவசாயிகளுக்கு விவசாயக் கருத்தூட்டல்

(முல்லைத்தீவு)

வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள நாவற்காடு விவசாயிகளுக்கு உலக விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் முல்லை மாவட்ட விவசாய திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து விவசாயிகளுக்கு கருத்தூட்டல் நிகழ்வினை நடத்தியுள்ளன. இக்கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட மிளகாய்,கச்சான்,கத்தரி, தக்காளி,பயிற்றை ஆகிய வற்றுக்கான செய்முறைபற்றிய இக்கருத்தூட்டல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது

இந்நிகழ்வில் உலகவிவசாய ஸ்தாபனத்தின் பிரதிநிதி, விவசாயப் போதனாசிரியர் சிவகௌரி, முள்ளியவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதில் பெருமளவான விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (20)



வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வராவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் பரிசு வழங்குவதனைப் படத்தில் காணலாம். (படப்பிடிப்பு:- ஆறு. சுபாஸ்கரன்)

## முஸ்லிம் கடற்றொழிலாளருக்கு வீச்சுவலை வழங்கல்

(முல்லைத்தீவு)

கெயார் நிறுவன அனுசரணையுடன் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் சிறுகடற்றொழில் செய்யும் முஸ்லிம் கடற்றொழிலாளர்கள் 43பேருக்கு வீச்சுவலைகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாச கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை பத்து மணிக்கு இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

பயனாளிகளுக்கான வீச்சுவலைகளை சமாசத்தின் தலைவர் செயலாளர், பணியாளர்கள் வழங்கினார்கள். (20)

### தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி

## பொதுக் கூட்ட அழைப்பிதழ்

**இடம்:-** கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம்
**காலம்:-** 25-12-2005 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்:-** காலை 10.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- சபையின் கருத்துரை
- கடந்தகால கூட்டத்தின் தீர்மானம்
- ஆராய்தல்
- பிற விடயங்கள்
- நன்றியுரை

*தங்களைத் தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*த.ஜெகதீஸ்வரன்* *தலைவர்.* (சி-13558) *அ.விஜயபாலகிருஸ்ணன்* *செயலாளர்.*

## பெற்றுக்கொள்ளவும்

ஸ்ரீதரன் - ஸ்ரீராஜ் - காங்கேசன் துறைவீதி வல்வெட்டித்துறை (850803838V), இராஜகோபால் தேவிகா-குரவயல் உடையார்கட்டு (708564176V), இராஜேஸ் வரன் இராஜ்குமார் - மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் (812434918V), அலோசியஸ்-5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, 134110நி (பயண அனுமதி அட்டை) ஆகியன கண்டெடுக்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

## ஊரகமேம்பாட்டு பேரவை கலந்துரையாடல்

(கண்டாவளை)

விசுவமடுப் பிரதேசத்தில் உள்ள ஊரக மேம்பாட்டு பேரவையினருக்கான முக்கிய கலந்துரையாடல் நேற்று முன்தினம் விசுவமடு மாவீரர் அஞ்சலி மண்டபத்தில் மு.ப. 10.30 மணிக்கு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் இப்பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைத் தேவைகள், அவசரதேவைகள் பற்றி இனங்கண்டு ஊரக மேம்பாட்டுப் பேரவையின் தகவல் அடிப்படையில் பிரதேச மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு அவசரமாக தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள், அபிவிருத்தி செய்யப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றி செயற்படுத்தும் நோக்குடன் பிரதேச மேம்பாட்டுப் பேரவை தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் பிரதேச மேம்பாட்டுப் பேரவையினர் இனங்காணப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக கிராமங்களுக்குச்- சென்று ஆராய்ந்து செயற்படவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் கிளி. மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.அருள், கிளி.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர், கிளி. மாவட்ட தமிழர்புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் ராஜன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (14)

## சாவு அறிவித்தல்

அன்னை மடியில் 1965 - 10 - 30



ஆண்டவன் மடியில் 2005 - 12 - 12

### சவரிமுத்து அற்புதராசா

**(எழுதுவினைஞர், உதவிஅரசஅதிபர்பணிமனை, கரைதுறைப்பற்று)**

முள்ளியவளை நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து அற்புதராசா (எழுதுவினைஞர், உதவி அரச அதிபர் பணிமனை, கரைதுறைப்பற்று) 12.12.2005 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சவரிமுத்து திரேசம்மாவின் அருந் தவப் புதல்வனும், டெனீசியாவின்(இலங்கை செஞ்சிலு வைச் சங்கம்) அன்புக்கணவரும், டினோசன், டெலக்சியா, அனோஜிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,டிலோஜ் டக்ளசின் ஞானத்தந்தையும்,திரு, திருமதி சிவலிங்கத்தின் மருமகனும், லூர்த்தம்மா,பிலோமினா, சூசையம்மா,பற் றிமா,(அரசினர் வைத்தியசாலை, முள்ளியவளை) மரி யம்மா,மரியறீற்றா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இரத்தினம், ஆசீர்வாதம், அன்னராசா உதயகுமார்,ரவி, அமிர்தநாயகம், சுதாஸ்கரன்,சுகந்தினி ஆகியோரின் மைத்துனரும், பேரின்பராணி (ஆசிரியை உடையார்கட்டு ம.வி), பேரின்பவதனி (ஆசிரியை உடையார்கட்டு ம.வி), டக்ளஸ் (மாவீரர் பல்லவன்), பேரின்பவனிதா (அவுஸ்தி ரேலியா), டினுஜான்சி, ஜிதுசாந், அனுசாந், துசானா, சுலக்சன், சுலக்சனா ஆகியோரின் அருமை மாமனாருமாவார்.அன்னாரின் இறுதிச் சடங்கு 13.12.2005 நேற்று நடைபெற்றது.

தகவல்.
பேரின்பராணி
(ஆசிரியை உடையார்கட்டு ம.வி)

(சி.13496)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### நாராயணசாமி வள்ளியம்மை

(வட்டக்கண்டல் மன்னார்)

பிறப்பு:- 31.10.1954 இறப்பு:- 14.11.2005

எமது சங்க உறுப்பினர் நா. சிறிதரனின் தாயாரின் 31 நாளான இன்று அன்னாரின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி...! ஓம் சாந்தி...!! ஓம் சாந்தி...!!!

தகவல்
முச்சக்கரவண்டி உரிமையாளர்சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(7092)

# உலக வர்த்தக மாநாட்டை எதிர்த்து ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டம்

(ஹொங்கொங்)

**ஹொங்கொங்கில் உலக வர்த்தக அமைப்பின் வருடாந்த உச்சி மாநாடு நடைபெறும் மண்டபத்தின் முன்பாக நேற்று பாரிய அளவிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.**

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தென் கொரியா, ஜப்பான், இந்தியா, பிலிப்பைன்ஸ், பிரேசில் உட்பட நூற்று நாற்பத்து ஐந்துக்கும் மேற்பட்ட வளர்முக நாடுகளின் விவசாய அமைப்புகள் பங்கேற்றன.

செல்வந்த நாடுகள் தமது விவசாயிகளுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் அபரிமிதமான மானியங்களை வழங்குவதன் காரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விவசாயிகள் பாரிய பின்னடைவை எதிர்நோக்குவதாக குற்றம் சுமத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து மாநாடு நடைபெறும் ஆறு நாட்களும் நடத்தப்படும் எனவும் தக வல்கள் வெளியாகியுள்ளன.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் இந்த நடவடிக்கைகள் காரணமாக வளர்முக நாடுகளின் விவசாயிகள் பொருட்களை சந்தைப் படுத்துவதிலும் ஏற்றுமதி செய்வதிலும் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக ஆர்ப்பாட்டத்தை நடத்தும் அமைப்புகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை உலக வர்த்தக அமைப்பால் பாதிக்கப்பட்ட நாடான தென் கொரியா உலகத்தை அச்சுறுத்தும் அமைப்பு என பாரிய பதாகைகளை ஊர்வலத்தில் தாங்கியிருந்தமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் மாநாடுகளின் போதும் வளர்முக நாடுகளின் விவசாய அமைப்புகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தன.

எனினும் செல்வந்த நாடுகள் எவ்விதமான ஆக்கபூர்வ மாற்று நடவடிக்கைகளையும் சமர்பிக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது




விசேடவாக்களிப்பு

ஈராக்கில் நாளை மறுதினம் பொதுத்தேர்தல் இடம் பெறவுள்ளது. நேற்று முன்தினம் விசேட வாக்களிப்பு இடம் பெற்றது. இந்த விசேட வாக்களிப்பைச் செலுத்திவிட்டு வரும் ஈராக்கியப் படையினரைப் படத்தில் காணலாம்.

## அமெரிக்காவில் தீவிபத்தில் இருவர் பலி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மிக்சிகன் மாகாணத்தின் ஜஸ்பெமிங் டவுன்ஷிப் பகுதியில் உள்ள மருத்துவமனையில் தீவிபத்து ஏற்பட்டது. இதில் சிக்கி இரண்டு பேர் பலியாகியுள்ளனர். மற்றவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்று தங்க வைக்கப்பட்டனர்.



பட்டினி சிற்பம்

உலக வர்த்தக அமைப்பின் ஆறாவது அமைச்சர்கள் மாநாடு ஹொங் கொங்கில் நேற்றுத் தொடங்கியது இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த ஆயிரக்கணக்கானோர் ஹொங்கொங் சென்ற வண்ணம் உள்ளனர். பட்டினிக்குப் பலியானானவர்களை பிரதிபலிக்கும் வகையில் ஹொங் ஹொங்கில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்களை பள்ளி மாணவிகள் பார்வையிடுகின்றனர்.

# எண்ணெய்க் கிடங்குத் தீயை அணைக்க பெருமுயற்சி! லண்டனில் எண்ணெய் விநியோகம் பாதிப்பு

### எங்கும் புகை மண்டலம் - மக்கள் வெளியேற்றம்

(லண்டன்)

லண்டன் எண்ணெய் சேமிப்புக் கிடங்குகளில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏற்பட்ட தீ தொடர்ந்து கொழுந்து விட்டெரிகிறது. தீயை அணைக்க தீயணைப்புப்படையினர் தொடர்ந்து போராடி வருகின்றனர்.


தீ தொடர்ந்து எரிவதால் எண்ணெய்க் விநியோகம் தடைப்பட்டுள்ளது இதனால் பெற்றோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டு போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

போர்ட் ஷைர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து புகை சூழ்ந்துள்ளதால் அந்தப் பகுதியை விட்டு மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். அந்தப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டு விட்டன.

இந்தத் தீயில் ஏற்கனவே பத்து பேர் பலியாகி விட்டனர். தீப் பற்றி எரியும் எண்ணெய்க் கிடங்கில் இருந்து தான் பல்வேறு பகுதிகளுக்கு எண்ணெய் விநியோகம் மேற்கொள்ள வேண்டும்.

தீப்பற்றி எரியும் எண்ணெய்க் கிடங்குகளில் இருந்து விஷவாயு பரவி வருகிறது. இதனால் பலருக்கும் மூச்சுத்திணறல், நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நீண்ட தூரத்தில் இருந்து தான் தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் முயற்சி செய்து வருகிறார்கள். எண்ணெய்க் கிடங்குகள் அருகே அவர்கள் இன்னும் நெருங்க முடியவில்லை.

புகை மண்டலம் பரவி வருவதால் சுற்று வட்டாரத்திலுள்ள பண்ணைகளில் ஏராளமான கால் நடைகளும் மூச்சுதிணறி உயிர் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



திரும்புகின்றன

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையிலுள்ள நப்லஸ் நகரில்தேடுதல் வேட்டையை முடித்துக் கொண்டு திரும்பும் இஸ்ரேல் இராணுவ வாகனங்கள் நப்லஸ் நகரின் எல்லையில் அணிவகுத்துச் செல்லுகின்றன.

# சிறைக்கைதிகள் சித்திரவதை குறித்து ஆதாரங்கள் கிடைத்துள்ளன

### -ஈராக், அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் சிறைக்கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது குறித்து மேலும் ஆதாரங்கள் தங்களுக்குக் கிடைத்துள்ளதாக ஈராக்கிய மற்றும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாக்தாத்தில் தடுப்பு முகாம் ஒன்றில் 625 சிறைக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை தாங்கள் கண்டு பிடித்துள்ளதாக அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர்களில் 13பேர் மிக மோசமாக சித்திரைவதை செய்யப்பட்டுள்ளார்கள். எனவே அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஈராக்கிய மனித உரிமை அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் சிறைக்கைதிகளின் நிலை குறித்து எந்த விபரமும் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் கைதிகள் தாங்கள் சித்திரவதை செய்யப்பட்டமைக்கான அடையாளங்களைக்காண்பித்து வருவதாக உள்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் வட கிழக்கில் உள்ள இந்துகுஷ் பகுதியை மையமாகக் கொண்டு இந் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 6.7 ரிச்டர் அளவு பதிவாகியிருந்தது. நிலநடுக்கத்தின் தாக்கம் வடக்கு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் காஷ்மீர் இந்தியாவின் டில்லி மாநிலங்களில் கடுமையாக இருந்தது. நிலநடுக்கம் பல வினாடிகள் நீடித்தது. இதனால் வீடுகள் குலுங்கின.

தூங்கிக்கொண்டிருந்த மக்கள் நிலநடுக்கத்தை அறிந்ததும் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக வீடுகளை விட்டு வெளியேறினார்கள். மக்களிடம் பீதியும் குழப்பமும் ஏற்பட்டது.

## எதென்ஸ் தபாலகத்தில் குண்டு வெடிப்பு; கட்டடம் சேதம்

(எதென்ஸ்)

கிரீஸ்நாட்டில் எதென்ஸ் நகரில் நிதி அமைச்சரகம் அருகே உள்ள தபால் அலுவலகத்தில் குண்டு வெடித்துள்ளது. இதில் தபால் அலுவலகக் கட்டடம் சேதம டைந்தது. குண்டு வெடித்த இடத்தில் இருந்து 50 மீற்றர் தொலைவிலுள்ள கட்டடத்தின் யன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியுள்ளன.

குண்டு வெடிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு ஒரு பத்திரிகை அலுவலகத்துக்கு குண்டு வெடிக்கப்போவது பற்றிய தகவல் கிடைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துக்கு யாரும் இது வரை உரிமைகோரவில்லை.



ஆர்ப்பாட்டம்

கலிபோர்னியாவில் ஆயுள்தண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்கு பொது மன்னிப்பு வழங்க விடுத்த கோரிக்கையை நீதி மன்றம் நிராகரித்ததையடுத்து அங்குள்ள சிறைச்சலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யும் ஆதரவாளர்கள்.

# பிஜி தீவில் இரு முறை நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கையால் மக்கள் ஓட்டம்

(சுவா)

பசுபிக் கடல் பகுதியிலுள்ள பிஜி தீவில் நேற்று அடுத்தடுத்து இருமுறை நிலநடுக்கம் ஏற்பட்டது. சுனாமிப் பீதியினால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளன.

முதலாவது நில நடுக்கம் அதிகாலை 3.16 மணிக்கு ஏற்பட்டது. வானுவா லீவு என்ற சுற்றுலா தலத்துக்கு வடகிழக்கே 255 கிலோமீற்றர் தூரத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.3 ஆக பதிவானது. கடலுக்கு அடியில் 29 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உருவானது.

இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட ஒருசில நிமிடங்களில் சமோவாப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. முதலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை விட இது சற்று அதிகமாகவே இருந்தது. இது 6.8 ரிச்டர் அளவில் பதிவானதாக அமெரிக்க பூகம்பவியல் துறை அலுவலகம் தெரிவித்துள்ளது. இது கட லுக்கு அடியில் 166அடி ஆழத்தில் உருவானது. இந்த நிலநடுக்கத்தால் அந்த தீவுப்பகுதிகளில் உள்ள கட்டடங்கள் ஆட்டம் கண்டன. சேதவிபரம் பற்றி உடனடியாக தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. கடலுக்கு அடியில் நில நடுக்கம் ஏற்பட்டதால் சுனாமிப் பேரலைகள் ஏற்படலாம் என்று எச்சரிக்கையும விடப்பட்டது. இதைத்தொடர்ந்து கடலோரப் பகுதிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடம் தேடி ஓடினார்கள்.

# ரொரன்ரோவில் சுனாமி அனர்த்த நிகழ்வின் புகைப்படக் கண்காட்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சுனாமி அனர்த்த நிகழ்வின் புகைப்படக் கண்காட்சியொன்று கனடா ரொரன்ரோ நகரில் கடந்த மூன்றாம் திகதி நடைபெற்றது.

தமிழீழத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இருபதாவது வருட நிறைவையும், கனடாவில் அதன் கனேடியக் கிளை ஆரம்பிக்கப்பட்டு பத்தாவது வருட நிறைவையும் முன்னிட்டு நடத்தப்பட்ட இக் கண்காட்சிக்கான புகைப்படங்கள் மற்றும் சிறுவர்களுக்கான உடை வகைகள் விளையாட்டுப் பொருட்கள் என்பனவும் தமிழீழத்திலிருந்து தருவிக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுக்கு அமெரிக்காவிலிருந்து பேராசிரியர் எதிர்வீரசிங்கம் , ஸ்காபரோ எஜின் கோர்ட் பாராளுமன்ற உறுப்பினர் ஜிம்கரியானிஸ், வில்லூட் பிரதேச வேட்பாளர் பௌலின்-ப்றோவ்ஸ் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

கனடா தமிழ் இளையோர் அமைப்பினரும் கலந்து கொண்டு தமது ஒத்தாசைகளையும், உதவிகளையும் வழங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.





# மனித உரிமைகள் தொடர்பில் மாந்தை மேற்கில் கருத்தரங்கு

மாந்தைமேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மனித உரிமைகள்தொடர்பான பயிற்சிக்கருத்தரங்கு ஒன்று நடைபெற்றுள்ளது. மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் மாந்தை மேற்கு அபிவிருத்தி நிறுவனத்தினால் டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் தனது திட்டக் கிராமமான மாந்தை மேற்குசெயலாளர் பிரிவின் மாளிகைத்திடல் வேட்டையன் முறிப்பு, முள்ளிக் கண்டல் ஆகிய கிராமங்களிலுள்ள திட்டப் பயனாளிகளிற்கு இப் பயிற்சிக் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை தேனுடையான் விஜி முன்பள்ளியில் நடைபெற்றது. மாந்தை மேற்கு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தே.மத்தியூஸ் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. இப்பயிற்சிக்கருத்தரங்கினை வவுனியா மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணி என்.சுதர்சன் அவர்கள் வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சியினை நடாத்தினார். இதில் டெனிஸ் அகதிகள் பேரவை நிறுவன பிரதிநிதி ஜி.என்.சந்திரன் மாந்தை மேற்கு அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர் தோ. இராஜேஸ்வரி மற்றும் சமூக வலுவூட்டாளர்கள், ஏனைய பணியாளர்கள், திட்ட பயனாளிகள் 65 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# வாழைச்சேனையில் கைக்குண்டுவீச்சு பொதுமகன் ஒருவர் காயம்

மட்டக்களப்பு - வாழைச்சேனை பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தாக்குதலை நடத்திய நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

வாழைச்சேனை பேருந்து நிலையத்தில் நடமாடிய படைத் தரப்பினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப் படுகின்றது.

காயமடைந்த நபர் தற்போது மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# செங்கண்மாரி நோயிலிருந்து பாதுகாக்க சுகாதார சேவையினர் அறிவுறுத்தல்

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழதாயகப் பகுதிகளில் சுனாமி இடைத்தங்கல் முகாம்களில் செங் கண்மாரி நோயின் தாக்கம் சற்று அதிகரித்து வருகின்றது. இந்நோயானது நாம் உள்ளெடுக்கும் நீர், உணவு மாசடைவதன் மூலம் ஏற்படுகின்றது. இது வைரஸ் நோயாக இருப்பதால் நோய் ஏற்படாது எம்மைப் பாதுகாத் துக்கொள்ளுவது மிகவும் அவசிய மானதாகும். எனவே நோய்வராது பாதுகாக்க பின்வரும் நடைமுறைகளை கைக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

☐ தினமும் கொதித்தாறிய நீரையே பருக வேண்டும்..

☐மலத்தை பாதுகாப்பாக நீரடைப்பு மலசலகூடங்களில் கழியுங்கள், மல சலகூடம் இல்லாத விடத்து வெட்டிப் புதையுங்கள்.

☐ குழந்தைகளின் மலத்தையும் மலசல கூடங்களிலேயே அப்புறப் படுத்தவேண்டும்..

☐ மலசல கூடம் சென்ற பின் உணவு உண்ணமுன், உணவு பரிமாறமுன், உணவு சமைக்க முன் கைகளுக்கு சவர்க்காரம் இட்டுக் கழுவுதல் வேண்டும்..

☐ சமைத்த உணவுகளை மூடிப் பாதுகாத்தல் வேண்டும். ஆறிய உணவை மீண்டும் சூடாக்கி உண்ண வேண்டும்.

செங்கண்மாரி நோயின் பரம்பலைத்தடுக்க தமிழீழ சுகாதாரசேவை தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



(படம் : சோதி)

கிளிநொச்சி - டிப்போச்சந்தி கனகபுரம் வீதிக்கருகாமையில் வியாபார நிலையங்களுக்கு முன்னால் குப்பை கூழங்கள் பல நாட்களாக அப்புறப் படுத்தப்படாத நிலையில் உள்ளதனைப் படத்தில் காணலாம்.

# கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு மேலைத்தேய இசைக் கருவிகள் அன்பளிப்பு

(விசுவமடு)

கிளி.கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு பழையமாணவர் ஒருவரால் மேலைத்தேய இசைக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளன.

கடந்த ஒன்பாதம் திகதி காலை பத்து மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் இந்தக் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

கண்டாவளையில் இருந்து புலம் பெயர்ந்து கனடாவில் வசிக்கும் வேலாயுதம் தெட்சணாமூர்த்தி என்பவர் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான மேலைத்தேய இசைக் கருவிகளை (பாண்ட் வாத்தியம்) அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.





(படம் : வதனன்)

பாண்ட் வாத்தியக் கருவிகளின் தொகுதிகளை வே. தெட்சணாமூர்த்தியின் சகோதரர் வே. ஐயாத்துரை, வித்தியாலய அதிபர் சி. சிறீதரனிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார். . (46)

# முள்ளியவளையில் த.பு.கழகத்தால் தொழில் பயிற்சி மையங்கள் அமைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

**முல்லைத்தீவு மாவட்ட முள்ளியவளைப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆரம்பப் பிரிவுப் பயிற்சிப் பாடசாலை, முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி மையம் ,தொழிற் பயிற்சிக்கல்லூரி என்பன திறந்துவைக் கப்பட்டுள்ளன.**



மேற்படி புதிய கட்டடங்களின் திறப்புவிழா நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளைப் பிரதேசத்தில் புதறிக்குடா எனும் கிராமத்தில் ஜேர்மனியிலுள்ள ஏ. ஜி.எஸ்.ஈ.பி, ஏ.பி.சி. ஆகிய நிறுவனங்களின் நிதிப் பங்களிப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நிறுவப்பட்டுள்ள இப் புதிய கட்டடங்களின் திறப்புவிழா நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நலன் திட்டப் பணிப்பாளர் இராசு இரவி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் ஜேர்மன் நாட்டு இரு நிறுவனப் பிரதிநிதிகளும் முன்பள்ளிச் சிறார்களால் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மங்கல விளக்கினை ஏ.பி.சி கட்டடப் பணிப்பாளர் பிரேங்கூன், ஏ.ஜி.எஸ்.ஈ.பி பணிப்பாளர் டொனால்ட், ஏ.ஜி.எஸ்.ஈ.பி இலங்கைப் பிரதிநிதி குரீவ் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஏபிசி ரெயின்போ பாடசலைக் கட்டடித்தினதும், ஆசிரியர் பயிற்சி மையக் கட்டடத்தினதும் பெயர்ப் பலகையினை ஜேர்மன் ஏ.பி.சி நிறுவனப் பிரதிநிதி திரைநீக்கம் செய்துவைத்தார். இதனைத் தொடர்ந்து பாடசாலைக் கட்டட வகுப்பறைகளையும், ஆசிரியர் பயிற்சி மையத்தின் வளாகங்களையும் ஏ.பி.சி நிறுவனப் பிரதிநிதிகளே நாடாக்களை வெட்டித் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தொழிற்பயிற்சி மையத்தின் பெயர்ப் பலகையினை ஜேர்மன் ஏ.ஜி.எஸ்.ஈ.பி நிறுவனப் பிரதிநிதி திரைநீக்கம்செய்துவைத்ததைத் தொடர்ந்து தொழிற்பயிற்சி மையக் கட்டடங்களையும் ஏ.ஜி.எஸ்.ஈ.பி நிறுவனப் பிரதிநிதிகள் நாடாக்களை வெட்டித் திறந்து வைத்தனர்.

சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்டி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் சிவனடியார், முகுந்தன் ஜேர்மன் நாட்டுப் பிரதிநிதிகள், ஆகியோர் நிகழ்த்தினர். இதனையடுத்து கட்டடங்களுக்கான உறுதிச்சான்றுகள் ஜேர்மன் நாட்டு நிறுவனப் பிரதிநிதிகளால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப்பணிப்பாளர் இரவிச்சந்திரனிடம் கையளிக் கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரிவுசார்ந்த பணிப்பாளர்கள். பணியாளர்கள் உட்பட முன்பள்ளி ஆசிரியர்கள். முன்பள்ளி மாணவர்களெனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (கு)

# சமூக வலுவூட்டல் பயிற்சிப் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் சமூக வலுவூட்டல் பயிற்சிப் பட்டறை ஒன்று வவுனியா வடக்கு பன்றிக்கெய்தகுளம் கிராமத்தில் நடைபெறவுள்ளது.

கார்ட், நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் பன்றிக்கெய்தகுளம் கிராமத்தில் உள சமூகப் பிரச்சினை, ஆற்றலை வலுப்படுத்தும், விழிப்புணர்வை ஏற்படுத்தலுமான இந்தப் பயிற்சிப் பட்டறையானது இம்மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் மேற்படி கிராமத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையை தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூக வலுவூட்டாளர்களான மு. புவனநாயகி, எஸ். முகுந்தன், தேவராசா ஆகியோர் நடாத்தவுள்ளனர்.

இதில், அக்கிராமத்தைச் சேர்ந்த கிராம மட்ட அமைப்புக்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறுவேண்டப்படுகின்றனர். (கு, லோ)

## வருடாந்த ஆடல்வேள்வி

கொழும்பு கம்பன்கழகம் நடாத்தும் வருடாந்த “நிருத்தோற்சவம்” ஆடல் வேள்வி எதிர்வரும் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஸ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட தினங்களில் தினமும் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும் மேற்படி ஆடல் வேள்வியினை கொழும்பு கம்பன் கழகப்பெருந்தலைவரும், ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசருமான சீ.வி.விக்கினேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தென்மராட்சியில் வீதியோர பனைகளை அழித்து வரும் சிறிலங்கா படையினர்

(யாழ்ப்பாணம்)

**யாழ். தென்மராட்சியில் கண்டி வீதியோரமாக வளர்ந்து நிற்கும் பனம்வடலிகளை அழிக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்.**

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் ரோந்து மற்றும் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் இராணுவத்தினர் மீதும் இராணுவ வாகனங்கள் மீதும் இனந்தெரியா தோரால் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

எனவே இவ்வாறான தாக்குதல்களில் இருந்து தமது படைகளையும் விநியோகமார்க்கங்களையும் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் இராணுவத்தினர் பனம் வடலிகளை அழித்து வருகின்றனர்.

இது யாழ். குடாநாட்டின் பனைவள அபிவிருத்தி முயற்சிகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதாக பனைவள உற்பத்தியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

படையினரது இந்த நடவடிக்கைகள் யாழ். குடாநாட்டின் பனைவள அபிவிருத்தியை பெரிதும் பாதித்திருப்பதால் இராணுவம் வடலிகளை அழிப்பதை உடனடியாக கைவிட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் மீண்டும் சட்ட விரோத மண்ணகழ்வு

தென்மராட்சிப்பிரதேசத்தில் மீண்டும் சட்டவிரோத மண்ணகழும் நடவடிக்கைகள் கடந்த சில வாரங்களாக அதிகரித்திருப்பதாக சூழல் பாதுகாப்பு அமைப்பு கவலை தெரிவித்துள்ளது. கடந்த சில மாதங்களாக கட்டுப்பாட்டுக்குள் இருந்த நடைமுறைகள் தற்பொழுது சட்ட விரோத மண் அகழ்வோரால் மீறப்பட்டு வருவதாகவும் கடந்த காலங்களில் இவ்வாறான மண்ணகழ்வில் ஈடுபட்டு அறிவுறுத்தலை பெற்றவர்களே மீண்டும் இத்தொழிலில் ஈடுபட்டு வருவதாக பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் பல கிடைத்திருப்பதாகவும், இது தொடர்பில் சூழல்பாதுகாப்பு அமைப்பு, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்த யாழ். குடாநாட்டில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்பொழுது நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் விபத்துக்கள் அதிகளவில் இடம் பெறுவதுடன் பொதுமக்களும் நாய்க்கடிக்கு இலக்காகி வருவதாக தெரியவருகிறது. இதன் முதற் கட்டமாக அந்தந்த பிரதேசங்களில் இயங்கி வரும் கால்நடை வைத்திய நிலையங்களில் பொதுமக்களால் வளர்க்கப்படும் நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ள முடியும் என்றும் இதன் ஒரு கட்டமாக வலிகாமம; தென்மேற்கு, மானிப்பாய் பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களால் வளர்க்கப்படும் நாய்களுக்கு, இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கையினை தாம் எடுத்திருப்பதாக மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் எம். கே. சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் தொழில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகளை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் வழங்கி வருகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, கற்கோவளம், புனிதநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கே அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் இத் தொழிற் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

இதில் சாரதிப்பயிற்சி, கடற்படகு வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சி , தையல்பயிற்சி, மணப்பெண் அலங்கார பயிற்சி என்பவற்றை வழங்கிவருகின்றனர்.

இவ்வாறு தொழிற்பயிற்சிகளை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையையும் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (33)

## வீடு ,மலசல கூடங்களை விரைவாகக்கட்டுமாறு அரச,அரசசார்பற்ற நிறுவனம் மக்களை வலியுறுத்து

(வலிகாமம்)

யாழ்.மாவட்டத்தில் வீட்டுத்திட்டங்கள் மற்றும் மலசல கூடத்திட்டங்களை வழங்கியிருக்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அவற்றை விரைவாக நிர்மாணித்து முடிக்குமாறும் , இல்லையேல் வழங்கப்பட்ட கட்டடப் பொருட்களை மீளப் பறித்து விடுவோம் என்றும் நெருக்குதல்களை விதித்து வருவதாக சம்பந்தபட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தெரிவிக்கும் திட்டங்கள் பெற்ற மக்கள், மேற்படி அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவித்திட்டங்கள் மிகவும் வறியநிலை மக்களுக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. இம் மக்கள் மிகவும் தாழ்ந்த நிலப்பிரதேசங்களிலேயே குடியிருக்கின்றனர். தற்போது தொடரும் பருவ மழைகாரணமாக பாரியளவில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் கட்டடப்பணிகள் எவையையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இவை எல்லாவற்றையும் நேரில் வந்து பார்த்தும் அறிந்தும் கொள்ளும் அதிகாரிகள் எம்மோடு தேவையற்ற வகையிலான விதண்டாவாதங்களையும், நெருக்குதல்களையும் விதித்து வருகின்றனர் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சில திட்டங்களை, குறிப்பிட்ட நிறுவனம் வழங்குகின்ற பணத்தொகையை வைத்துக் கொண்டு ஒப்பேற்ற முடியாதிருப்பதாகவும் அதற்கு மேலதிக நிதி தேவைப்படுவதனால் வறிய நிலையில் இருக்கும் தாங்கள் கடன்களைப் பெற்று சிறிது சிறிதாகவே முடிக்க வேண்டியிருப்பதாகவும் கூறுகின்றனர்.

இந்நிலையில் அதிகாரிகள் வருட இறுதியில் கொண்டு வந்து மேற்படி திட்டங்களைத் தந்துவிட்டு, மழை மற்றும் பண நெருக்கடிகளுக்கு மத்தியில் வேலைகளை முடிக்குமாறு நெருக்குவாரங்களைத் தருவதென்பது தமக்கு வேதனை தரும் விடயமாக உள்ளது என்று சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.(37)

## ஜி.ரி இசற் நிறுவன நிதியுதவியுடன் வலிகாமத்தில் நிரந்தர வீட்டுத் திட்டம்

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆறுகிராம அலுவலர் பிரிவுகளில் அறுபது நிரந்தர வீடுகளை அமைத்து கொடுக்க ஜி.ரி இசற் நிறுவனம் முன்வந்திருப்பதாக நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வறுமைகோட்டுக்குட்பட்ட குடும்பங்களை தெரிவுசெய்து அவர்களது நிரந்தர காணிகளில் ஐந்து இலட்சம் பெறுமதியான வீடுகளை அமைத்துத் தர மேற்படி நிறுவனம் முன்வந்திருப்பதுடன் நீர்வேலி வடக்கு, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் வடக்கு, அச்சுவேலி தெற்கு, பத்தமேனி ,புத்தூர் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்தே இப்பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இதற்கான பணிகள் விரையில் முன்னெடுக்க விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் இந் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளாா.

## மழை,காற்றால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் வீசிய புயல் காற்று, கடும்மழை காரணமாக பல ஆயிரக்கணக்கான வாழைகள் அழிந்துள்ளதுடன் மற்றும் மரக்கறிப் பயிர்களும் அதிகளவில் அழிவுக்குள்ளா கியுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக கிழங்குப் பயிர்கள், வெங்காயம், புகையிலை உட்பட ஏனைய பயிர்களும் அழிந்துள்ளன. குறிப்பிட்ட விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் போது வருடாந்தம் தமது நகைகளை அடைவு வைத்தும் கடன் பட்டுமே விவசாய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இயற்கை அனர்த்தத்திற்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களில் பயிர்களுக்கான அழிவுகள் வழங்கப்படாமையால் இவர்கள் தொடர்ந்து விவசாய முயற்சியில் ஈடுபடாமல் போவதுடன் கடும் கஸ்டங்களுக்கும் உள்ளாகி வருகின்றார்கள்.

இம் முறையும் கடும் அழிவுகள் ஏற்பட்டுள்ளமையால் விவசாயிகள் தமக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். வெள்ளம், காற்று வீசி ஒரு வாரமாகின்ற போதிலும் குறிப்பிட்ட விவசாயிகளின் பயிரழிவுகளை எந்தவொரு விவசாய அலுவலக உத்தியோகத்தர்களோ. கமத்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களோ கிராம மட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களோ பார்வையிடாத நிலமையே இன்றுவரை காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

அரச உத்தியோகத்தர்களின் இத்தகைய அசட்டையீனமான செயற்பாடுகள்களால் தொடர்ச்சியாக விவசாய முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக விவசாய அமைப்புக்களையும் குறை கூறுகின்றார்கள் . (41)

## சர்வதேச மாணவர் பேரவை இராணுவத்தினரால் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சந்திக்கு அண்மையாக அமைந்துள்ள சர்வதேச மாணவர் பேரவை அலுவலகம் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் கடந்த ஒரு வாரமாகக் காணப்படுகின்றது.

பலாலி வீதிச் சந்தியில் அமைந்திருக்கும் இவ் அலுவலகத்தை சுற்றி இருபத்திநான்கு மணிநேரமும் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருந்து வருகின்றது. குறிப்பாக இந்த அலுவலகத்திற்குச் சென்று வரும் மாணவர்களை கண்காணிப்பதும் மற்றும் அங்கிருந்து வருபவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதுமான செயல்களில் இந்த இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்திற்கு தனது கற்றல் விடயமாகச் சென்று விட்டுத் திரும்பிய திறந்த பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவர் அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டு விட்டு கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார் .

குறிப்பிட்டமாணவன் தற்போது யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார் .

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் மாணவர்களை மேலும் இராணுவத்தினரின் மீது கடும்சினம் கொள்ளச்செய்து வருவதாக மாணவர்கள் மட்டத்தில் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தினர் வேண்டுமென்றே இத்தகைய ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என பலரும் கூறுகின்றார்கள் .

கல்விச் சமூகத்தினர் இந்த விடயமாகக் கருத்துத் தெரிவிக்கையில், விரக்தியுடன் கற்று வரும் மாணவர்களுக்கு இராணு வத்தினர் இத்தகைய செயல்கள் மூலம் பிரச்சினைகளைக் கொடுப்பார்களேயானால் அவர்கள் ஆயுதம் ஏந்தி செயற்படுவதைத் தவிர வேறு மார்க்கம் அவர்களுக்கு கிடையாதெனக் கூறுகின்றார்கள்.

## இராணுவத்தை வெளியேற எச்சரித்து யாழ். இல் பரவலாக சுவரொட்டி


(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள முக்கிய சந்திகள், இராணுவக் காவலரண்கள், முகாம்கள், இராணுவத்தினர் பயன் படுத்துகின்ற பொதுஇடங்களில் ''எச்சரிக்கை'' என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதுடன் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்த எச்சரிக்கை துண்டுப்பிரசுரத்தில் சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படையே எம் தாய் மண்ணை விட்டு உடனே வெளியேறு. இல்லையேல் உங்கள் ஆயுதங்களே எமக்குப் போதும் உங்களை வெளியேற்ற, எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. சுவரொட்டிகளில் மக்கள் படை தென்மராட்சி தாக்குதல் பிரிவு எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. (கீ)

# நோர்வேயின் நிபந்தனைகள் அதன் கௌரவத்திற்கான தேவை!

இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சியில் சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் சில நிபந்தனைகளை முன்வைத்தே செயற்படப்போவதாக நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக்சூல் ஹெய்ம் தெரிவித்துள்ளமை சிறிலங்கா அரச தரப்பில் பெரும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது. இது இராஜதந்திர வழிமுறைகளுக்கு அப்பாற்பட்டதொன்று எனவும், அனுசரணையாளராகச் செயற்படும் ஒரு நாடு



சம்பந்தப்பட்ட அரசு மீது இவ்வாறு நிபந்தனைகளை விதிப்பதென்பது வரம்பு மீறிய செயல் என்பதுமே சிறிலங்கா அரசின் நிலைப்பாடாகும்.

நோர்வேயின் இத்தகைய நிலைப்பாடானது இராஜதந்திர வழிமுறைக்கு உட்பட்டதா? இல்லையா? என்பது ஒருபுறம் இருக்க, சிறிலங்கா அரசுடன் இராஜந்திர வழிமுறைகளுக்கு உட்பட்ட வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமா? என்பது முக்கியமானதொரு கேள்வியாகும். ஏனெனில், சிறிலங்கா ஆட்சியாளர்கள் சில வேளைகளில் இராஜதந்திர வழிமுறைகள் என்றால் கிலோ என்ன விலை? எனக் கேட்கக்கூடியவர்கள்.

சிறிலங்கா அரசாங்கத்துடன் நோர்வே அரசிற்கும் நிரம்பிய பட்டறிவுண்டு. ஒரு வகையில், நோர்வே அரசு - குறிப்பாக, அபிவிருத்தி அமைச்சர் எரிக்சூல் ஹெய்ம் நிபந்தனை முன்வைக்கப்போவதாகக் கூறிக்கொண்டமைகூட அவர் நேரடியாகப் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் காரணமாகவும் கூட இருக்கலாம். ஏனெனில், சிறிலங்கா அரச தரப்பால் இராஜதந்திர வழிமுறைகளையும் மீறி அதிக அளவில் அவமானப்பட்டுக் கொண்டவர் அவராவார்.

இராஜதந்திர வழிமுறை / அணுகுமுறை என்பதில் நேரடிப் பேச்சுக்கள் மூலம் இரு தரப்பும் எழுதப்படாத சில உடன்பாடுகளுக்கு வருதல் என்பதும் ஒன்று. இத்தகைய உடன்பாட்டிற்கு பின்னர் இரு தரப்பினரும் இதற்கு விசுவாசமாக நடந்து கொள்ளுதலும் அவசியமானதாகும். ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்களுடன் இவ்வாறு நடந்து கொள்ளுதல் என்பது சாத்தியப்படானதல்ல. ஏனெனில், அவர்கள் இராஜதந்திர வழிமுறையிலான இணக்கப்பாடு தொடர்பாக மட்டுமல்ல, கையொப்பமிடப்பட்ட உடன்பாட்டில் கூட விசுவாசமாக நடந்துகொள்வதில்லை.

இதேவேளை, சிறிலங்கா ஆட்சியாளர்கள் இராஜதந்திர ரீதியிலான பண்புகளுடன் செயற்படுபவர்களாகவும் இருந்ததில்லை. சிறிலங்காவின் தற்போதைய பிரதமமந்திரி ரட்ணசிறிவிக்கிரமநாயக்க, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்றவர்களுடன் நோர்வேக்கு ஏற்பட்ட அனுபவமே இவர்களின் இராஜதந்திர பண்புகள் எத்தகைய என்பதை வெளிப்படுத்துவதற்குப் போதுமானதாகும்.

அது மாத்திரமல்ல, விருந்தினர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது, அவர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பது என்பதைக்கூட சிறிலங்கா ஆட்சியாளர்கள் கடந்த காலத்தில் புரிந்து கொண்டு செயற்பட்டதாக இல்லை. எடுத்துக்காட்டாக சமாதான ஏற்பாட்டாளராக அழைக்கப்பட்ட நோர்வேத்தரப்பை ஜே.வி.பி., ஜாதிகஹெல உறுமய மற்றும் பௌத்த அடிப்படைவாத அமைப்புக்கள் அவமானப்படுத்தியபோதும், ஆட்சியாளர்கள் அதனைக் கண்டுகொள்ளவில்லை. மறைமுகமாக ஊக்கமளிக்கவே செய்தனர்.

இந்த வகையில், இராஜதந்திர வழிமுறைகள் /பண்புகள் என்பனவற்றிற்கு அப்பாற்பட்ட விதத்தில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் நடந்துகொண்டமைக்காகவே நோர்வே அரசும் சமாதான முயற்சிகளில் தாம் பங்கேற்பதானால், நிபந்தனையுடன் கூடியதாகவே அது இருக்கும் என நிபந்தனை விதித்துள்ளது. இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கம் இதில் ஆத்திரப்பட எதுவுமில்லை.

இது மாத்திரமல்லாது சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளர்களாகச் செயற்படுவர்கள் ஒருதலைப்பபட்சமாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டும் என எதிர்பார்க்கும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவ்வாறு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாட்டாளராகச் செயற்படுபவர்கள் தமது கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இராஜதந்திர வழிமுறைக்கு அப்பாற்பட்டதெனக் கூறமுடியும்?

நோர்வே அரசு சிறிலங்கா ஆட்சியாளர்களிடம் விதிக்கும் / கோரும் நிபந்தனைகளுக்கு இரண்டு வகைப்பட்ட காரணங்கள் உள்ளன.

01) நோர்வே அரசும், அதன் சமாதான ஏற்பாட்டாளர்களும் கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அனுபவம்.

02) தற்போதைய புதிய அரசின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாடு.

இதில் முதலாவது காரணி பற்றி விபரிப்பதென்பது அதிகம் தேவையற்றதொன்று. ஏனெனில், அவை அடிக்கடி கூறப்பட்ட விடயங்களாகவும், பல இடங்களில் இருந்தும் அறியப்பட்டவையுமாகும். இருப்பினும், நோர்வேத் தரப்பை அழைத்துவிட்டு அவர்களின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமலும், அவர்களை அவமரியதை செய்யும் வகையிலும், அவர்கள் தேசத்தையும், மக்களையும் அவமானப்படுத்தும் வகையிலும் நடந்துகொண்டவற்றையும் சுட்டிக்காட்டமுடியும்.

எடுத்துக்காட்டாக, கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தின் முன்பாக நோர்வேயின் தேசியக்கொடியை எரித்தமை, நோர்வே மக்களை பச்சை மீன் தின்னிகள் என ஏசியமை, சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு வந்தவர்களை வெள்ளைப்புலிகள் என அவதூறு பேசியமை என்பன நோர்வே அரசின் கௌரவத்தைப் பாதிக்கும் விடங்களாகவே கொள்ளத்தக்கதாகும்.

நோர்வே அரசை சமாதான ஏற்பாட்டாளராக அழைத்தவர்கள் சிறிலங்கா ஆட்சியாளர்கள். நோர்வேயின் சமாதான முயற்சிகள் ஏற்புடையதாக இல்லை எனக் கருதின் அவர்களை இவ்விடயத்தில் இருந்து வெளியேறுமாறு கோருவதே இராஜதந்திர வழிமுறையும், அரசியல் நாகரிகமுமாகும்.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்கள் அவ்வாறு நடந்துகொண்டதாக இல்லை. நோர்வே அரசை இழிவுபடுத்தவே முற்பட்டனர். இதன் மூலம் நோர்வே தானாகவே வெளியேற வேண்டும் என்றே கருதுகின்றனர். இதில் கூட சிறிலங்கா அரசு இலக்கு ஒன்றுடனேயே செயற்பட்டது.

அதாவது, நோர்வே தானாக வெளியேறும் பட்சத்தில் அதற்கான பொறுப்பைத் தான் ஏற்க வேண்டியதாக இருக்கமாட்டாது. ஆகையினால், மேற்குலகிலும் சரி, அதற்குவெளி உலகிலும் சரி சமாதான முயற்சிகளை தாம் குழப்பியடித்தமைக்கானதொரு தோற்றப்பாடு உருவாகாது தடுத்துவிடலாம் என்பதே அதன் குறியாக இருந்தது.

இதேவேளை நோர்வேத் தரப்பை மீண்டும் ஏற்பாட்டாளராகப் பணியாற்றுமாறு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முழு விருப்பத்துடன் அழைத்ததாகவும் இல்லை. இந்தியாவை சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்படவைக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்த நிலையிலேயே இத்தகையதொரு முடிவுக்கு மகிந்த ராஜபக்ஷ வரவேண்டியதாக இருந்தது. அதாவது, சிறிலங்கா அரசின் விருப்பத்திற்குரிய நண்பராக இன் னும் நோர்வே இல்லை.

இந்நிலையில், மீண்டும் அழைக்கப்பட்ட நோர்வே அரசு தனது நாட்டினதும் மக்களினதும் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் நிபந்தனை முன்வைப்பது என்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இரண்டாவதாக இனப்பிரச்சினை தொடர்பான தற்போதைய அரசின் நிலைப்பாடு அறியப்பட வேண்டியதாக உள்ளது. ஏனெனில், கடந்த அரசாங்கத்தினதும், (முன்னாள் சனாதிபதி சந்திரிகா தலை மையிலானது) அதற்கு முந்தைய அரசாங் கத்தினதும் (ரணில் விக்கிரமசிங்க தலைமையிலானது) இனப்பிரச்சினை மற்றும் யுத்தநிறுத்தம் தொடர்பானதுமான நிலைப்பாட்டிற்கும் தற்போதைய மகிந்தராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கும் இடையில் பாரிய இடைவெளியும், முரண்பாடும் உள்ளன. இதில் முக்கியமானவையாக,

01) யுத்த நிறுத்த உடன்பாட்டை மாற்றி அமைத்தல்

02) ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வு.

03) சமாதான ஏற்பட்டாளராக நோர்வே பங்கேற்பது குறித்து அரசை ஆதரிக்கும் கூட்டாளிக் கட்சிகளின் நிலைப்பாடு என்பன குறிப்பிடத்தக்கவை.

இதில் முதலாவதாக யுத்தநிறுத்த உடன்பாட்டை மாற்றி அமைத்தல் என்பது நோர்வேத் தரப்புடன் இரு வகையில் தொடர்புபடுகின்றது. ஒன்று இவ்யுத்த நிறுத்த உடன்பாட்டை நோர்வேத்தரப்பு முற்றாக ஆதரிக்கின்றது. இவ்யுத்த நிறுத்த உடன்பாடு மாற்றி அமைக்கப்பட வேண்டியதில்லை என்பது அதன் நிலைப்பாடாகும். இன்று யுத்தநிறுத்த உடன்பாடு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளமை யுத்தநிறுத்த உடன்பாட்டில் உள்ள தவறு காரணமாக அல்ல. யுத்த நிறுத்த உடன்பாடு சீராக அமுல் செய்யப்படாமல் இருப்பதே காரணம் என்பது நோர்வேயின் அபிப்பிராயமாகும்.

இந்த நிலையில், யுத்த நிறுத்த உடன்பாடு மாற்றி அமைத்தல் என்பது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து நோர்வே அரசாங்கத்துடன் முடிவொன்றிற்கு வரவேண்டியதாகவுள்ளது. ஏனெனில், யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரமே நோர்வேத் தரப்பு சமாதானப் பேச்சுவார்த்தையிலும், யுத்த நிறுத்தக் கண்காணிப்பிலும் கணிசமான பங்களிப்பை ஆற்றவேண்டியதாகவுள்ளது.

அடுத்ததாக, இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வு என அரசாங்கம் தனது கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்துள்ளமை தொடர்பானதாகும். அதாவது, இனப்பிரச்சினைத்தீர்விற்கு சமஷ்டி முறையிலான - அதாவது தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் தீர்வை எட்டுதல் என்பது தொடர்பாகவே முன்னைய பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, சர்வதேச சமூகமும் சமஷ்டி ஆட்சி முறையையே தீர்விற்குப் பொருத்தமானதெனக் கருதுகின்றன.

ஆனால், சனாதிபதி ராஜபக்ஷவோ ஒற்றையாட்சி முறை[illegible]ளாகவே தீர்வு, தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்ற பேச்சிற்கே இடமில்லைஎன பல தடவை தெரிவித்துள்ளார். இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசு எத்தகைய நிலைப்பாட்டுடன் செயற்படப்போவதாக அறிந்து கொள்வதும் நோர்வேத்தரப்பின் கடப்பாடாகவுள்ளது.

சிலவேளைகளில் நோர்வேத் தரப்பும் சரி, சர்வதேசமும் சரி ஒற்றையாட்சி முறைக்குள் தான் தீர்வு என்ற அரசாங்கத்தின் கொள்கையை ஏற்றுக்கொண்டாலும்கூட அதில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்பட முடியாது என நோர்வே அரசிற்கு நன்கே தெரியும். அதாவது விடுதலைப்புலிகளுடனான பட்டறிவு அவர்களுக்கு இதனைத் தெளிவுபடுத்தியிருக்கும்.

ஆகையினால், தனது காலத்தையும், பொருளாதாரத்தையும் விரயம் செய்து மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியில் முன்னேற்றம் காணக்கூடியதான ஏது நிலைகள் ஏதும் உண்டா? அவை குறித்து சிறிலங்கா அரசாங்கம், ஆட்சியாளர்கள் அளிக்கக்கூடிய உத்தரவாதங்கள் என்ன என்பதை அறிய வேண்டிய தேவை நோர்வேக்கு உண்டு. ஏனெனில், அதனை அடி ஒற்றியே நோர்வே ஏற்பாட்டாளராகச் செயற்படுவதா? இல்லையா? என்ற தீர்மானத்திற்கு வர முடியும்.

இறுதியாக அரசை ஆதரிக்கும் கூட்டணிக்கட்சிகளின் இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாடு என்ன? அது குறித்து ஆளும் கட்சியின் / தலைமையின் நிலைப்பாடு என்ன? என்பது குறித்தும் நோர்வே அரசு தெளிவான முடிவினை / உத்தரவாதத்தினை ஆட்சியாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானதாகவுள்ளது.

ஏனெனில், ஆட்சியாளர்கள் இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்துள்ளமையும், நோர்வேயை சமாதான ஏற்பாட்டாளராக பணிபுரிய அழைத்தமையும் வெளிநாட்டு, உள்நாட்டு அழுத்தங்களின் காரணமாகவே என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், சிறுபான்மையான அரசாங்கத்திற்கு ஆதரவளித்துவரும் கூட்டாளிகளான ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும் அரசின் நிலைப்பாட்டை எதுவரையில் ஆதரிப்பார்களெனக் கூறுவதற்கில்லை.



ஆகையினால், இக்கட்சிகளின் நிலைப்பாடும் - இக்கட்சிகள் தொடர்பாக அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பாகவும் நோர்வேத்தரப்பு அறிய முற்படுவதில் தவறு எதுவும் இருப்பதாகக்கொள்ளமுடியாது. ஏனெனில் அரசின் கூட்டாளிகளினால், நோர்வேத்தரப்பு பல தடவை அவமானப்படுத்தப் பட்டுள்ளது. அத்தோடு, அரசாங்கத்தின் கூட்டாளிகளாக இருப்பவர்கள் அரசாங்கம் கூறும் இராஜதந்திர வழிமுறைகளுக்கோ, அரசியல் நாகரிகத்திற்கோ உட்பட்டுச் செயற்படுபவர்களாகவும் இல்லை.

இந்நிலையில். நோர்வேத் தரப்பு சமாதான ஏற்பாட்டாளர்களாக மீண்டும் செயற்படத் தொடங்குவதற்கு முன்பாக - தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் சமாதான முயற்சிகளுக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் வேறுவிதமாகக் கூறின் சில உத்தரவாதங்களின் பின்னர் செயற்பட முடிவெடுத்ததில் தவறில்லை என்றே கூறலாம்.

இதேவேளை நோர்வே அரசின் செயற்பாடு இராஜதந்திரச் செயற்பாடுகளுக்கு மாறானதென்ற குற்றச்சாட்டும் பொருத்தப்பாடானதாகத் தெரியவில்லை. ஏனெனில், இராஜதந்திர நடைமுறைகள் அரசியல் நாகரிகம் என்பனவற்றைக் கடைப்பிடிக்கும் அரசு ஒன்றே அது குறித்துப் பேசுவதற்கு அருகதை உடையதாகும்.

- ஜெயராஜ்




# 05.12.2005 11.12.2005

## 05

☐ ஆயுதக்குழுக்கள் இல்லாத நிலை உருவாகி இராணுவத்தினர் மக்கள் மீதான நெருக்குவாரங்களைக் குறைத்தால்மட்டுமே மக்கள் கிளர்ந்தெழுகின்ற நிலையைக்கட்டுப் படுத்த முடியும். இவ்வாறு ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் எதேச்சையான சட்டத் திற்கு அப்பாற்பட்ட கொலைகளுக்கான விசேடதூதுவர் பிலிப்அலஸ்ரன் அடங்கிய குழுவினருடனான சந்திப்பின்போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.

☐ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பாரிய மண்அணைகளை இராணுவத்தினர் அமைத்து வருவதைக் கண்டித்தும் மாணவர்கள் மீதான காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டித்தும் மாணவர்கள் இரண்டாவது நாளாக போராட்டம்.


☐ யாழ்.நீர்வேலிப்பகுதியில் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் கைது.

☐ யாழ்.மீசாலையில் இருவேறு தாக்குதல் சம்பவங்களில் ஒரு இராணுவச் சிப்பாய் பலி, இருவர் காயம்.

☐ தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் படைத்தளபதிகளுக்குமிடையில் முகமாலை சூனியப்பிரதேசத்தில் இடம்பெறவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

## 06

☐யாழ்.இருபாலைச் சந்தியில் இராணுவ உழவியந்திரம் ஒன்றின் மீது இனந் தெரியாதோரால் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட ஏழு இராணுவத்தினர் பலி, மற்றுமொருசிப்பாய் காயம்.



☐ சிறிலங்காவின் கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல்தயாசந்தகிரி மற்றும் இராணுவத்தளபதி லெப்ரினட் ஜெனரல் சரத்பொன் சேகா, பொலிஸ்மா அதிபர் சந்திராபெர் ணாண்டோ ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டனர்.

☐மூதூர் பிரதேசத்தில் இரு தமிழர்கள் வெள்ளைநிற வானில் வந்த சிலரால் கடத் தப்பட்டனர்.

☐திருகோணமலை மூதூரில் தமிழ் முஸ்லிம்மக்களுக்கிடையே நடந்துவரும் வன்முறைகளைத்தணிக்கும் வகையில் விடுதலைப்புலிகளுக்கும் முஸ்லிம்பிரதிநிதி களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

☐ அம்பாறை மாவட்டம்,கஞ்சிகுடிச்சாறு விடுதலைப்புலிகளின் பாதுகாப்பு முன்னரண்க ளிற்கு முன்னாள் வைத்து கருணாகுழுவின் முக்கியஸ்தர்களான இனியபாரதி மற்றும் சுமன் உள்ளிட்ட நால்வரை அவர்களுடன் சேர்ந்து வந்த இருவர் சுட்டுக்கொன்றுவிட்டு விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

## 07

☐ வடமராட்சி பாடசாலை மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மூன்றாவது நாளாக வடமராட்சி பாடசாலைகளுடன் இணைந்து வலிகாமம்,தென்மராட்சி,தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய கல்விக்கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களும் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.



☐ வவுனியா பேருந்து நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச்சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் பலி, சிப்பாய் உட்பட ஐந்து பேர் காயம்.

## 08

☐ யாழ்.கலட்டிச்சந்தியில் இருக்கும் இராணுவமினிமுகாமைஅகற்ற வேண்டுமெனக் கோரி அந்த இராணுவ முகாமிற்கு முன்பாக மாணவர்கள் ஆர்ப்பாட்டப் போராட்டமொன்றை நடத்தினர்.


☐ யாழ்.குடாநாட்டின் பதற்றநிலைமைகள், சமாதானமுயற்சிகளில் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்பு ஆகியன தொடர்பாக ஆராயும் பொருட்டு இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

☐வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜொனி, வவுனியாமாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ஞானம் இடையிலான சந்திப்பொன்று புளியங்குளம் அரசியல்துறை செயலகத்தில் இடம்பெற்றது.

☐சிலாபம் உடப்புப்பிரதேசத்தில் பொலிசார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் 24 தமிழர்கள் கைது.

## 09

☐ பொதுமக்கள் மீது இராணுவம் தாக்குதல் களையும், கு... ங்களையும், அச்சுறுத்தல் களையும் தீவிரமாக்கி வருகின்றது. இந்தப் போக்குத் தொடருமானால் மக்களின் கொந்தளிப்பை எவருமே கட்டுப்படுத்த முடியாதநிலை தோன்றும், யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதை விரைவுபடுத்தி நிலைமையைச் சீர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிறிலங்காவுக்கான நோர்வே அரசின் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேசியபோது சு.ப.தமிழ்ச்செல்வன்தெரிவிப்பு.



☐சிறிலங்காப் படையினரின் வன்செயல்கள் மற்றும் கொலைகளுக்கு எதிராக திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பூரண கதவடைப்புப் பேர்ராட்டம் நடத்தப்பட்டது.

☐யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கான விரிவுரைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் என்பவற்றைப் பகிஷ்கரித்து இராணுவத்தின் அராஜகங்களிற்கெதிராகப் போராட்டத்தை நடத்தினர்.

☐யாழ்.குடாநாட்டு மாணவர்களால் சிறிலங்கா சனாதிபதி மற்றும் பேரினவாத அடக்கு முறையாளர்கள் என்பவற்றைச் சித்தரிக்கும் கொடும்பாவி ஒன்று எரிக்கப்பட்டது.

☐ யாழ்ப்பாணம் மருதனார்மடம் காங்கேசன் துறை வீதியில் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் காயம்..

☐ மட்டக்களப்பில் இரு சகோதரிகள் சிறிலங்கா இராணுவ துணை ஆயுதக்குழுவினரால் குண்டு வீசி கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை மக்கள் பேரணியொன்றை நடத்தினர்.

☐ மட்டக்களப்பு மாவட்டம் கிரானில் இனந் தெரியாதோரால் இருவர் சுட்டுக்கொலை.

## 10

☐ உலக மனித உரிமைகள் தினத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மனித உரிமைகளை மீறும் வகையில் அடாவடியில் ஈடுபட்டனர்.

☐ சர்வதேச மனித உரிமைகள் நாளினை முன்னிட்டு தமது தனி மனித உரிமைகள் மதிக்கப் படவேண்டும். தம் மீதான விசாரனைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு சிறைக் கைதிகள் சிறையின் கூரை மீது அமர்ந்து போராட்டம் நடத்தினர்.

☐ பனூஸ் புயல்காரணமாக குடாநாட்டில் பெருமழை, பெருமளவான மக்கள் இடப் பெயர்வு.

☐ சுயநிர்ணய உரிமையென்பது ஐ.நாவின் சர்வதேச மனித உரிமை சாசனத்திலும் வரை யரைப்பட்டுள்ள ஓர் இனத்தின் தனித்துவமான வாழ்வுரிமை எனஅரசியல் துறைப்பொறுப் பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் வடக்கு கிழக்கு மனிதஉரிமைகள் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வில் கலந்து கொண்டு தெரிவிப்பு.

## 11

☐ திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசததில் முஸ்லிம் விசாயிகள் மீது இனந் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயம.

☐ கதுருவெலவிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொதுமக்களின் பேருந்தின் மீது இராணுவ புலனாய்வுக்குழு மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் காயம்.

☐ திருகோணமலை மாவட்டம் அலஸ் தோட்ட பகுதியில் ஈ.பி.டி.பி உறுப்பினரொருவர் வீதியில் வைத்து சுட்டுக்கொலை.

☐ வவுனியாவில் லெப் கேணல் நவநீதன் பயிற்சிப் பாசறையின் ஆறாவது பயிற்சி அணியினருக்கான பயிற்சி நிறைவு நிகழ்வு இடம்பெற்றது.

☐ லெப். கேணல் மறவனின் முதலாமாண்டு நிறைவு நிகழ்வு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் இடம்பெற்றது.

☐ வவுனியா பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் பொலிசாரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

☐ திருகோணமலை உள்துறை முகவீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நான்கு பேர் காயம்.

☐ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை இலங்கைக்கு வெளியே ஆசிய நாடொன்றில் நடாத்துவதற்கு இலங்கை அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளதாக யப்பானின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசிஅகாசி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

# புலிகளுடன் சந்திப்புக்களை மேற்கொள்ள படை அதிகாரிகளுக்கு சிறிலங்கா அரசு தடை

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எந்தவொரு சந்திப்பையும் மேற்கொள்ளக்கூடாது என்று அனைத்து சிறிலங்காப் படையதிகாரிகளுக்கும் சிறிலங்காப் பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோதபாயராஜபக்ஷ உத்தர விட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான எந்தவொரு சந்திப்பும் அரசியல் மட்டத்தில் அல்லது குறித்த விடயங்கள் தொடர்புடைய அரச அதிகாரிகளின் மட்டத்திலேயே இடம்பெற வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ள பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளுடன் சந்திப்புக்களை நடத்தவது படையினரின் பணி அல்ல எனத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் புலிகளுக்கும் உள்ளூர் மட்ட இராணுவ அதிகாரிகளுக்குமிடையில் பலமுறை சந்திப்புக்கள் இடம்பெற்றிருந்தன என்பதுடன் இந்தச் சந்திப்புக்கள் மூலம் உள்ளூர்ப் பிரச்சினைகள் சில தீர்த்தும் வைக்கப் பட்டிருந்தன.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதிக்கும், யாழ்ப்பாண இராணுவத் தளபதிக்குமிடையிலான சந்திப் பொன்றை கண்காணிப்புகுழுவினர் ஏற்பாடு செய்திருந்த போதிலும் இறுதி நேரத்தில் இராணுவத் தளபதி கலந்துகொள்ளாததினால் அச் சந்திப்பு நடைபெறவில்லை என்பது அறிந்ததே.

# எஸ்.பி.திசாநாயக்கவுக்கு மன்னிப்பு; உயர்நீதிமன்றின் கருத்தை மகிந்த கோரல்

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவின் தண்டனைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவரை விடுதலை செய்வதற்கு எண்ணியுள்ள சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறியத் தீர்மானித்துள்ளார். பொதுமன்னிப்பு அளிக்க அரசியலமைப்பின் 34(1) பிரிவிற்கு அமைய சனாதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் உயர்நீதிமன்றத்திற்கு கௌரவமளிக்கும் வகையில் அதன் கருத்தை அறிய எண்ணியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவிற்கு 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எட்டாம் திகதி இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழுவினாலேயே முன்னாள் அமைச்சருக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

எஸ்.பி.திசாநாயக்கவிற்கான தண்டனைக் காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10-15 ஆம் திகதிக்குமிடையில் முடிவடையவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார். சனாதிபதி எஸ்.பி.திசாநாயக்கவிற்கு பொது மன்னிப்பு வழங்கினாலும் அவரது தண்டனைக் காலம் ஆறு மாதத்தைத் தாண்டியுள்ளதால் அரசியலமைப்பின் 89(அ), 91(1) ஆகிய பிரிவுகளுக்கு அமைய அவரால் ஏழு வருடங்களுக்கு பாராளுமன்ற பொதுத்தேர்தலில் கலந்துகொள்ளவோ, வாக்களிக்கவோ முடியாது போகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தண்டனைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் எஸ்.பி.திசாநாயக்கவிற்கு மன்னிப்பளிக்குமாறு ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் சனாதிபதியைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆயுதத்துடன் சிப்பாய்மறைவு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் கலன்வெவ முகாமைச் சேர்ந்த சிப்பாயொருவர் தனக்கு வழங்கப்பட்ட ஆயுதத்துடன் தலைமறைவாகியுள்ளார்.

ரி56 ரக துப்பாக்கி ஒன்றுடனும், அதற்குரிய 120 ரவைகளுடனுமே இந்த இராணுவச் சிப்பாய் தலைமறைவாகியுள்ளதாக அநுராதபுரம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

முகாமைச் சேர்ந்த காவலரண் ஒன்றில் அவர் காவல் கடமையில் இருந்த பொழுதே இவர் ஞாயிற்றுக்கிழமை இரவு தலைமறைவாகியுள்ளார். தப்பிச் சென்ற இந்த இராணுவச் சிப்பாயைக் கைதுசெய்வதற்கான சகல தகவல்களும், நாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் மேலும் தெரிவித்தனர். (32)

## 18 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம்:-

10-05-1948

மறைவு:-

14-12-1987

**இரத்தினசிங்கம் சரஸ்வதி**
வேம்படி-வடக்கு
உடுத்துறை-தாளையடி

ஆண்டுகள் பதினெட்டு சென்றாலும் ஆறாது~உன் நினைவு!
ஆசைக்கு அம்மா என்று அழைத்திட யார் வருவார்!
ஆதங்க மாழையினிலே ஆண்டாண்டாய் நனைகின்றோம்.
தாயன்பின் தாற்பரியம் எமக்கு யார் அருள்வார்/தருவார்!

(7089) -குடும்பத்தினர்-

## முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்!
30.06.2005 இற்கு முன்னர் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தென்றல் இலத்திரனியல் திருத்தகத்தில் திருத்தத்திற்காக பொருட்களை வழங்கியவர்கள் உரிய ஆதாரம் காட்டி எதிர்வரும் 24.12.2005 இற்கு முன்னர் மீளப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:-** இவ் அறிவுறுத்தலுக்கமைய மீளப் பெற்றுக் கொள்ளப் படாத பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல.

*நிர்வாகம்,*
*"தென்றல் இலத்திரனியலகம்"*
*இரணைப்பாலை வீதி,*
*புதுக்குடியிருப்பு*

(7088)

## தவறிவிட்டது.

**முல்லைத்தீவு உண்ணாப்புலவு-விஸ்வநாதன் வீதியைச்சேர்ந்த அருள்-சுமன் என்பவரின் சிறிய பேசுக்குள் தேசிய அடையாள அட்டை இரண்டு, நிரந்தர பயணஅட்டைகள் நான்கு என்பன முல்லைத்தீவு சர்வதேச தொலைத்தொடர்பு நிலையத்தில் 09.12.2005 பி.பகல் 1.30 மணியளவில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் முல்லைத்தீவில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபையில் ஒப்படைக்கவும். அல்லது அ.சுமன் உண்ணாப்புலவு, விஸ்வநாதன் வீதி, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

(சி.7103) தகவல்: அ.சுமன்

## பகிரங்க ஏல விற்பனை

வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கத்தின் பாவனையிலுள்ள கீழ் குறிப்பிடப்படும் விபரப்படியான இரண்டு மோட்டார் சைக்கிள்களும் எதிர்வரும் 24.12.2005 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தலைமைப்பணிமனை மண்டபத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலத்தில் பங்கு கொள்ளவிரும்புவோர் மீளளிக்கப்படாத வைப்பாக ரூ.250/-ம், மீளளிக்கப்படும் வைப்பாக ரூ.1000/= ம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் கேள்வித் தொகையின் அரைப்பங்குக்கு குறையாமல் உடன் செலுத்து வதுடன் மீதியை மூன்று தினங்களுக்குள் செலுத்தி பொருளை எடுத்துச்செல்ல வேண்டும். ஏலதாரரின் முடிவே இறுதியானதாகும்.

01.சி.டீ.125 என்.பீ ஜீ.கி.யூ 9476
02.எம்டி 90-த13-0962

காரியாலய நேரத்தில் மோட்டார் சைக்கிள்களை பார்வையிடலாம். மேலதிக விபரங்களுக்கு தலைமைப் பணிமனையில் தொடர்பு கொள்ளவும்.

*தலைவர்,*
*வ.வ.ப.நோ.கூ.சங்கம்,*
*நெடுங்கேணி.*

(சி.13495)

# இந்திய தொழில்நுட்பத்தை உள்வாங்கி விவசாயத்துறை மேம்பாட்டுக்கு முயற்சி

### -சனாதிபதி செயலகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் விவசாயத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்தியாவின் நவீன தொழில் நுட்பங்களைப் பிரயோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இந்தியாவில் பயன் படுத்தப்படும் முறைகளும், அதனுடன் தொடர்பான திட்டங்களை இங்கு அமுல்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் திட்ட பணிப்பாளர் பேராசிரியர் சுவாமிநாதனை சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்த பொழுதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இலங்கையின் விவசாயத் துறையை மேம்படுத்த தேசிய முறைகளை கையாள்வது குறித்து இந்த சந்திப்பின் பொழுது, அதிககவனம் செலுத்தப்பட்டதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (32)

# தமிழீழ நிர்வாகசேவை வேலை வங்கி ஆரம்பித்தல்

இலங்கை அரசாங்கம் 1956 ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட முறையில் தமிழ்மக்களின் விகிதாசாரத்திற்கேற்ப அரச நியமனங்களில் உள்வாங்காமலும் திறமைக்கேற்ப பதவி உயர்வுகள் வழங்காமலும் நீண்ட காலத்திட்டமாக நடைமுறைப்படுத்தி வந்தது. இதனை தமிழ் அரசியல்வாதிகளால் பாராளுமன்றத்தில் கேட்க முடிந்ததே தவிர சீர்செய்ய முடியவில்லை. அரசின் இத்திட்டத்திற்கு யுத்தச் சூழ்நிலை மேலும் உதவியாக அமைந்துள்ளதால் வடக்கு கிழக்கு மாகாணத்தின் பதவி வெற்றிடங்கள் அதிகளவில் விகிதாசாரத்திற்கு ஏற்ப நிரப்பப்படவில்லை. இந்த விடயத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. பதவி வெற்றிடங்களுக்கு அகில இலங்கை ரீதியில் தெரிவுசெய்யும் போது போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேச விண்ணப்பதாரிகள் பெருமளவு பாதிக்கப்படுகின்றனர். சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் அதிக சம்பளம் கொடுத்து கொழும்பு போன்ற நகர்ப்பகுதிகளிலிருந்து பதவியினரைச் சேர்க்கின்றனர். எமது பகுதிகளில் தகுதியானோர் இருந்தும் உள்வாங்கப்படாமைக்குரிய காரணங்களில் ஒன்று தகுதியானோர் தமக்கு தெரியாதென்பதும். அத்தோடு குறுகிய கால விளம்பரப்படுத்தலில் ஆட்சேர்க்கும் நடைமுறையால் இவற்றை அறியமுடியாமலிருப்பதும். இவற்றையெல்லாம் பரிசீலித்த பின்னர். இராணுவ ஆக்கிரமிப்பு தவிர்ந்த எமது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள இளைஞர்/யுவதிகளில் அந்தந்த தகுதியானவர்களுக்கு அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உதவியாக தமிழீழ நிர்வாகசேவை நடுவப்பணியகத்தால் வேலை வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கீழேயுள்ள மாதிரிப்படிவம் மாவட்ட தமிழீழ நிர்வாகசேவை பணிமனையில் பெறப்பட்டு பூரணப்படுத்திய விண்ணப்பத்தை திரும்பவும். மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பணிமனையில் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியிட்டு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

(குறிப்பு:- படிவக்கட்டணம் ரூபா 5/= ஆகும்)

வேலை வங்கி,
தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப்பணியகம்,
155ஆம்கட்டை,
பாரதிபுரம்,
கிளிநொச்சி.

5/=

## வேலை வங்கி விண்ணப்பம்

தொடர் இல.....

முழுப்பெயர் :- ..........
முகவரி (நிரந் :- ..........
தற்காலிகம் (வசிக்கும் காலம்) :- ..........
பிறந்த திகதி :- ..........
பால் :- ........../........../.......... வயது ..........
மாவட்டம் :- ..........
பிரதேச செயலர் பிரிவு :- ..........
கிராம அலுவலர் பிரிவும்/இலக்கமும் :- ..........
கல்வித்தகைமை :- ..........
இறுதியாக கல்விகற்ற வகுப்பும் வருடமும் :-
..........

க.பொ.த. (சா/த) வருடம் ..........

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

வருடம் .......... க.பொ.த. (உ/த)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

பொது அறிவு ..........
பட்டதாரியாயின் கற்கை நெறி :- ..........
பாடங்கள் :- ..........
ஏனைய தகைமைகள் :- ..........
எதிர்பார்க்கும் தொழில் :- ..........
மாவீரர்/போராளி/ ஆதரவாளர் குடும்பமாயின் விபரம் :-
..........
..........

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்

.......... ..........
திகதி விண்ணப்பதாரர் ஒப்பம்

விண்ணப்பதாரர் திரு/திருமதி/செல்வி .......... எனது பிரிவைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்

.......... ..........
திகதி கிராம அலுவலர் ஒப்பம்
றபர் முத்திரை

### அலுவலகப்பாவனைக்கு

(சி.13552)

# அபுசலீமின் கூட்டாளி கைது

(மும்பை)

டுபாயில் இருந்து இந்தியா வந்த அபுசலீமின் கூட்டாளி நயீம்கானை மும்பை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மும்பை தொடர் குண்டுவெடிப்பில் முக்கிய குற்றவாளியான அபுசலீமும் அவரது காதலி மோனிகா பேடியும் போர்த்துக்கல் நாட்டிலிருந்து கடந்த மாதம் இந்தியா கொண்டு வரப்பட்டனர். பொலிசாரிடம் அபுசலீம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அபுசலீமின் கூட்டாளி நயீம்கான் டுபாயில் பதுங்கியிருந்து அபுசலீமுக்காக தொழிலதிபர்களைக் கடத்தி பணம் பறிப்பதில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது. மும்பையைச்சேர்ந்த தொழிலதிபர் பிரதீப் ஜெயின் என்பவரை 1995ஆம் ஆண்டு கடத்திக் கொன்ற வழக்கில் நயீம்கான் முக்கிய குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து நயீம்கான் மும்பை வருவதாக தீவிரவாத எதிர்ப்புப்படை பொலிசாருக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து விமானம் மூலம் நேற்று முன்தினம் மும்பை வந்த நயீம்கானைப் பொலிசார் சுற்றிவளைத்து கைது செய்தனர்.



தொடர்ந்து பெய்துவரும் சாரல் மழையில் சபரிமலையில் காணப்பட்ட காட்சி.


## Correction

We missed to publish the address in our news paper's job advertisement of IOM dated 11th of December. please send your CVs by snailmail or e-mail to the following address


**Mission To Sri Lanaka-Colombo**

1 Police park place. Colombo 5.Sri lanaka
Tel:+ 94.11.5361944.Fax:+94.11.5361944.E-mail iomsl@sltnet.lk.Internet: www.iomsrilanka. org

**Sub office- Jaffna**

38 Temple Rd. Jaffna. Sri Lanaka
Tel:+94.21.2227680. E.mail: iomja@sltnet.lk


# பாராளுமன்றில் கேள்விகேட்பதற்கு இலஞ்சம்பெற்ற 11 உறுப்பினர்களை அம்பலப்படுத்திய தொலைக்காட்சி



(புதுடில்லி)

இந்தியாவின் 11 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கேள்விகள் கேட்பதற்காக இலஞ்சம் வாங்கிய காட்சிகளை ஒளிநாடாக்களில் பதிவு செய்த ஒரு தொலைக்காட்சி அதை ஒளிபரப்பு செய்ததன் பின்னர் குறிப்பிட்ட 11 உறுப்பினர்களையும் சபைக்கு வருவதற்கு மக்களவை சபாநாயகர் தடைவிதித்திருக்கிறார். இதைத் தொடர்ந்து அவ் உறுப்பினர்களைத் தமது கட்சிகளில் இருந்து இடை நிறுத்தம் செய்வதாக 11 உறுப்பினர்களின் கட்சிகள் அறிவித் துள்ளன.

அரசியல் முக்கியஸ்தர்கள் இலஞ்சம் வாங்குவதை பொறி வைத்து பிடிப்பதற்காக "ஆஜ்தக்" தனியார் தொலைக்காட்சி அலைவரிசையும் "கோப்ராபோஸ்ட்" இணையத்தளமும் இணைந்து ஏற்பாடு செய்தன.

அரச சார்பற்ற இயக்கங்களின் பிரதிநிதிகள் போல் சில நிருபர்கள் வேடமிட்டு பா.உ.க்களை அணுகி தங்களது பிரச்சினைகள் பற்றி பாராளுமன்றத்தில் கேள்விகள் கேட்டவேண்டும் என்று கேட்டு அதற்கு இலஞ்சமாக கட்டுக் கட்டாக பணம் கொடுத்தார்கள். 11 பா.உ.க்கள் இவ்வாறு பணம் பெற்றனர். அவர்களில் பா.ஜ.வைச் சேர்ந்தவர்கள் ஆறு பேர்.

காங்கிரசை சேர்ந்தவர் ஒருவர். பகுஜன்சமாஜ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மூன்று பேர் இந்த பா.உ.க்கள் பணம் பெற்ற காட்சி வீடியோவில் இரகசியமாக பதிவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் ஆஜ்தக் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இந்த ஒளிபரப்பு நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

எம்.கே. அன்னா பட்டேல் (மராட்டியம்), ஓய்.ஜி. மகாஜன் (மராட்டியம்), பிரதீபகாந்தி (சட்டீஸ்கர்) ,சுரேஷ் சாண்டல் (இமாச்சலபிரதேசம்) , சத்ரபால்சிங் (ஒரிசா) சாந்திர பிரதாப்சிங் மேற்கண்ட ஆறு பேரும் பா.ஜ. கட்சி யைச்சேர்ந்தவர்கள். , ராம்சேவக்சிங் (குவாலியர்) இவர் காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர் மனோஜ் குமார் (ஜார்க்கண்ட் இவர் ராஷ்டிரிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்) , நரேந்திரகுமார் உத்தரப் பிரதேசம் , லால்சந் திரா உத்தரப் பிரதேசம் , ராஜாராம் பால் உத்தரப் பிரதேசம்ஆகியோரே பாராளுமன்றில் கேள்வி கேட்பதற் காக இலஞ்சம் பெற்றவர்கள் என ஆதாரத்துடன் அத் தொலைக்காட்சி காட்சிப்படுத்தியது.




பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மாநிலங்களின் முதல்வர்கள் மாநாடு டில்லியில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. மாநாட்டில் பா.ஜ. கட்சியின் தலைவர் அத்வானி, துணைத்தலைவர் வெங்கையாநாயுடு, முன்னாள் மத்திய அமைச்சர் ஜஸ்வந்த்சிங் மற்றும் பா.ஜ. ஆட்சி செய்யும் மாநில முதல்வர்கள் கலந்துகொண்டனர்.


# 2006 ஆம் ஆண்டு தொடங்கவுள்ள புதிய பேருந்துப்பணிக்கான வழித்தட அறிவித்தல்

கீழ்வரும் புதிய வழித்தடங்களுக்கு பேருந்துக்கான வழி ஒப்புதல் பெற விரும்புவோர் 31.12.2005 இற்கு முன் விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

01 ஒதியமலை- நெடுங்கேணி
02 வெடிவைத்த கல்லு- நெடுங்கேணி
03 சுண்டிக்குளம் -விசுவமடு
04 பாலமோட்டை-நவ்வி, புளியங்குளம்
05 பாலம்பிட்டி,மடு - உபிலங்குளம்
06 முல்லைத்தீவு- கேப்பாப்பிலவு
07 மாத்தளன் -புதுக்குடியிருப்பு


பேருந்துக்கு இருக்கவேண்டிய முக்கிய தகுதிகள்:~

01 உற்பத்தி ஆண்டு 1995 இற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்
02 ஆகக் குறைந்தது 30 இருக்கைகளுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்
03 விண்ணப்பதாரியின் பெயரில் ஊர்தியின் தமிழீழ, சிறிலங்கா பதிவுகள் இருத்தல் வேண்டும்
04 மேலே கூறப்பட்ட மூன்று தகுதிகளையும் ஆவணங்கள் உறுதிப்படுத்தக் கூடியவாறு இருத்தல் வேண்டும்
05 ஊர்தி ஆய்வின்போது பயணிகள் போக்குவரவுக்கு ஏற்ற நிலையில் இருத்தல் வேண்டும்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
முகாமையாளர்,
பயணிகள் ஊர்தி வழி அனுமதி வழங்கும் பணியகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.13551)

# டில்லி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தோல்வியின் விளிம்பில் சிறிலங்கா



இந்திய - சிறிலங்கா அணிகளுக்கிடையில் டில்லியில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிறிலங்கா அணி வெற்றிபெற 436 என்ற பிரமாண்டமான ஓட்ட இ[illegible] நிர்ணயித்துள்ளது.

நான்காம் நாளான நேற்று ஐந்து விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்கள் என்ற நிலையில் தொடர்ந்து ஆடிய இந்திய அணி மேலும் ஒரு விக்கெட்டை இழந்து 375 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தி முதல்இனிங்ஸ் மேலதிக ஓட்டத்துடன் (60)சேர்ந்து 436 என்ற வெற்றி இலக்கை சிறிலங்காவுக்கு நிர்ணயித்தது.



துடுப்பாட்டத்தில் பதான் 93, யுவராஜ்சிங் ஆட்டமிழக்காது 77, டோனி ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர். ராவிட் 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சமிந்த வாஸ் இரண்டு விக்கெட்டுக்களையும், முரளிதரன், பெர்னாண்டோ, பண்டார தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடும் சிறிலங்கா அணி 121 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து தடுமாறி வருகின்றது. துடுப்பாட்டத்தில் சங்கக்கார 33 ஓட்டங்களையும். அத்தப்பத்து 69 ஓட்டங்களையும் பெற்றனர். ஜெயவர்த்தன எட்டு ஓட்டங்களைப் பெற்று களத்தில் உள்ளார். பந்து வீச்சில் கும்ளே இரண்டு, பதான், அககர், ஹர்பஜன்சிங் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

# டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 300 விக்கெட்டைப் பெற்ற வாஸ்



டெஸ்ட் கிரிக்கெட்டில் 300 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சிறப்பை பெற்றுள்ளார் இலங்கை அணியின் இடதுகை வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ்.

டில்லியில் நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், திங்கட்கிழமை நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டத்தில் இந்திய வீரர் கௌதம் கம்பீரை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் அச்சிறப்பைப் பெற்றார் வாஸ்.

எல்பி. டபிள்யூ முறையில் மூன்று ஓவர்களில் கம்பீரை வெளியேற்றினார் அவர். இலங்கையின் டெஸ்ட் கிரிக்கெட்வரலாற்றில் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 578விக்கெட்டுக்களைச்சேர்த்து, அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர்கள் பட்டியலில் முதலிடத்திலுள்ளார்.

டில்லியில் நடைபெற்றுவரும் போட்டிமுரளிதரனுக்கு 98 ஆவது போட்டி அவருக்கு அடுத்த இடத்தை சமிந்த வாஸ் பிடித்துள்ளார். அவர் 90ஆவது போட்டியில் விளையாடி வருகிறார்.

# மேற்கு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தென்னாபிரிக்கப் பந்து பந்துவீச்சாளர் தோல்வி



அவுஸ்திரேலியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கு முன்பு மேற்கு அவுஸ்திரேலியா அணியுடனான பயிற்சிப்போட்டியில் தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களின் பந்து வீச்சு எடுபடாமல் போய்விட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

மேற்கு அவுஸ்திரேலியா அணி ஐந்து விக்கெட்டுக்களையிழந்து 300ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. அவ்வணியின் லியுக்போமஸ் பேக் 128பந்துகளில் 145ஓட்டங்களையும் லயம்டேவிட் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஷோன் பொலக் மட்டும் 51ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்காவின் கெம்ப் பத்து ஓட்டங்களையும் வில்லியர்ஸ் ஐந்து ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். கலிஸ் 72 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்துள்ளார்.

# தோல்விக்கான காரணம் நீண்ட நித்திரை கருத்தை மறுக்கிறார் மார்கஸ்ரெஸ்கொதிக்

நேற்று முன்தினம் பாகிஸ்தானுடனான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து தோல்வியடையக் காரணம் பிளிண்டொப்புக்கு விருது வழங்கிய நாளன்று நீண்ட நேரம் நித்திரை விழித்து அதனால் போட்டி நடைபெற்ற தினம் நித்திரை கொண்டு விட்டு தாமதமாக வந்ததே என முன்னாள் வீரர் ஜெப் போய்கொட் தெரிவித்த கருத்தை இங்கிலாந்து வீரர் மார்கஸ் ரெஸ்கொதிக் மறுத்துள்ளார். எது திட்டமிட்டு செய்த தயாப்படுத்தல் எனத் தெரிவித்த ஐஸ்கொ[illegible]திக்போட்டி பற்றி நன்கு விளங்கிக் கொண்டிருந்ததாகக் கூறினார். இங்கிலாந்து பெரிய தொடர் ஒன்றில் பங்குபற்றுகின்ற வேளை நித்திரையைக் குழப்பிவிடக்கூடாது என போய் கொட்டு தெரிவித்ததுடன் பாகிஸ்தான் அணி ஒரு



அச்சுறுத்தலான அணி என்பதை அவர்கள் ஏன் புரிந்து கொள்ளாது இருக்கிறார்கள் என்றும் போய்கொட் வினாவெழுப்பினார்.

அதற்கு பதிலளிக்கும்போதே ரெஸ்கொதிக் மேற்படி மறுப்பைத் தெரிவித்தார்.




இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணித்தலைவியுடன் இந்திய பெண்கள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் கோசுவாமி நடன நிகழ்வில் கலந்துகொண்டபோது...



இந்தியாவிற்கு அண்மையில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட இங்கிலாந்துப் பெண்கள் கிரிக்கெட் அணியினர் இந்தியப் பாரம்பரிய ஆடை அணிந்து இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியினருடன் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டபின் புகைப் படத்திற்கு காட்சியளிக்கின் றனர்.




# பாராளுமன்றில் சச்சினுக்கு பாராட்டு




கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் 35 சதம் எடுத்து உலக சாதனை ஏற்படுத்திய டெண்டுல்கருக்கு இந்திய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் சோம் நாத் சட்டர்ஜி பேசும்போது டெண்டுல்கர் ஏற்படுத்திய இந்தச் சாதனை மிகவும் பாராட்டுதலுக்குரியது. இதில் நாம் பெருமைப்படுகிறோம். அவரது இந்த சாதனை இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும். அவரது சாதனை தொடரட்டும் என்று கூறினார்.

# நோபல் சமாதான பரிசைப் பெறுவதே எனது வாழ்நாள் இலட்சியம்

உலகில் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரரென வர்ணிக்கப்படுபவரும் பிரேசில் தேசிய அணி வீரரும் ரியல் மட்ரிட்கழகத்துக்காக விளையாடி வருபவருமான றொனால்டோ நோபல் சமாதானப் பரிசைப் பெறுவதே தனது வாழ்நாள் இலட்சியம் எனத் தெரிவித்துள்ளார்.





ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்று இல்லாமல் சிறந்த ஐ.நா சமாதானத் தூதுவராக நற்பெயரை உருவாக்கி ஓய்வு பெறுவதே தனது வாழ்நாள் இலட்சியம் எனத் தெரிவித்துள்ளார்.

ரியல் மட்ரிட் அணியில் ஆடி வருபவரும் இவரது நண்பரும் ஐ.நா உலக உணவுத் திட்டத்தின் நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளவருமான சினெடின் சிண்டானே போல் வருவதுடன் உலக சமாதான நோபல் பரிசை வெல்வதற்காகக் கடுமையாக உழைக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

அது எனக்கு திருப்தியை ஏற்படுத்துவதுடன் அது ஒரு தியாகம் நிறைந்த செயலெனவும் றொனால்டோ தெரிவித்துள்ளார். 29வயதான றொனால்டோ தாம் அரசியலில் ஈடுபடும் வாய்ப்பு மிக அரிதாக உள்ளதாகக் கூறும் றொனால்டோ பிரேசில் நாட்டின் மினாஸ்ஜெரோல் மாநில கவர்ணரான ஏஸியா நெவேல் எனது நண்பர் அவர் பிரேசிலின் சனாதிபதியானால் விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியை எனக்கு வழங்குவதாகக் கூறியிருக்கிறார். என்றாவது அவர் சனாதிபதியாவார் அது நடந்தால்அதற்கு என்னைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் கூறினார்.

# மூன்றாவது ஒருநாள் போட்டியில் பாக். அணியில் அப்ரிடி



பைசலாபத்தில் நடைபெற்ற இங்கிலாந்துடான முதலாவது டெஸ்டின் போது ஆடுகளத்தினூடாக ஓடிய குற்றத்துக்காக போட்டிகளில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சகிப் அப்ரிடி அவ்வணிகளுக்கிடையில் நடைபெறும் இறுதி மூன்று ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்றுவார் என அறிவிக்கப்படுகிறது. இவர் மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் பங்குபற்றவில்லை

பாகிஸ்தான் டெஸ்ட் தொடரை இரண்டுக்கு பூச்சியம் என்ற ரீதியில் வென்று ஒருநாள் தொடரில் ஒன்றுக்கு ஒன்று என்ற நிலையில் உள்ளது.

## சிந்தனைக்கு



மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# சதிவலைகள்!

தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிராக எத்தகைய சதிவலைகள் பின்னப்படுகின்றன என்பதனை கருணா ஒட்டுக் குழுவுடன் செயற்பட்டுப் பின்னர் தப்பியோடிவந்தவர்கள் ஊடக வியலாளர்கள் மத்தியில் தெரிவித்த கருத்துக்கள் வெளிப்படுத்தப் போதுமானவையாகும்.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இத் தகைய சதிவலைகள் பின்னப்படுகின்றன என்ற தகவல்கள் அறியப்படுவது இவர்களினால்தான் என்பதல்ல. ஆனால், இவர்கள் வெளியிட்ட தகவல்கள் முன்னைய தகவல்களை ஊர்ஜிதம் செய் பவையாக, உறுதி செய்பவையாகவுள்ளன என்பது முக்கிய மாகின்றது.

சிங்கள அரசுகள், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் தோற்கடிக்கவும், அரசியல் ரீதியில் பலவீனப் படுத்துவதற்கும் பல்வேறு வகையிலும் முற்பட்டு நிற்கின்றமை இன்று நேற்று ஆரம்பமாகிய நடவடிக்கை அல்ல. தமிழ்மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்டம் முனைப்புப் பெறத் தொடங்கிய காலத் தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டுவரும் நவடிக்கையாகவே உள் ளது. சதிவலைகளைப் பின்னும் செயல் உள்ளூர்மட்டத்தில் இருந்து இன்று சர்வதேச மட்டத்திற்கும் சென்றுள்ளது.

ஆரம்பத்தில் அரசியல் கட்சிகள் இடையில் காணப்பட்ட முரண் பாட்டைப் பயன்படுத்திக் கொண்ட பேரினவாத ஆட்சியாளர்கள் பின்னர் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி வந்தமையும் தமிழ் பேசும் மக்கள் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் நட வடிக்கைகளிலும் முனைப்புக் காட்டி வந்தமை வெளிப்படையானது. அதாவது இன்றைய இராணுவ - அரசியல் சூழ்நிலையில் மூன்று வகையான செயற்பாடுகளில் சிங்கள ஆட்சியாளர்கள் - அதன் ஆயுதப் படைத்தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் முதலாவதாக தமிழ்மக்களால் ஓரம் கட்டப்பட்ட, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஊறுவிளைவிக்கத்தக்கவர் களை அரவணைத்தும், போசித்தும் இனவிரோத நடவடிக்கை களுக்குத் தூண்டுதல் அளித்தல் ஆகும். இக்குழுக்கள் இன அழிப்பிற்குத் தம்மாலான ஒத்துழைப்பை வழங்குவதோடு தமிழ் பேசும் மக்களிடையே மோதல்களைத் தோற்றுவிக்கும் வகையிலான செயற்பாட்டை மேற்கொள்பவையாகவும் உள்ளன.

எடுத்துக்காட்டாக, பிரதேசவாதம், தமிழ் பேசும் மக்கள் இடை யிலான சமூக கலாச்சார முரண்பாடுகளை முனைப்புப்படுத்தும் நடவடிக்கைகளைக் கூறலாம். இவர்களின் இத்தகைய செயற் பாடுகள் மூலம் தமிழர் தாயகத்தில் அமைதியின்மையைத் தோற்று விப்பது அவர்கள் நோக்கமாகும்.


இதன் இன்னொரு அம்சமாக, தமிழ் பேசும் மக்களின் ஒரு தரப்பினர் இடையே ஆயுதக்குழுக்களைத் தோற்றுவித்து - தமிழ்பேசும் சமூகங்கள் இடையே மோதல்களைத் தோற்றுவிக்கும் செயற்பாட்டை மேற்கொள்வதாகும். ஆரம்பத்தில் தமிழ் பேசும் மக்களில் ஒரு சமூகத்தினரிடம் இருந்து சிலரைத் தெரிவு செய்து இராணுவத்தில் இணைத்துக் கொண்டதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்க முனைந்தவர்கள், தற்போது ஆயுதக் குழுக்களையே தோற்றுவிக்கத் தொடங்கி யுள்ளனர்.

ஆனால், ஒடுக்குமுறை அரசுகளின் இத்தகைய சதி நடவடிக்கை கள் ஒன்றும் உலகிற்குப் புதியதல்ல. உலகில் பல அரசுகள் கைக்கொண்ட, கைக்கொண்டிருக்கும் வழிமுறைகளே இவையாகும். ஆகையினால், இது குறித்து ஆச்சரியம் அடையவில்லையாயினும், தமிழ்பேசும் மக்கள் அனைவரும் அதாவது சகல தரப்பினரும் இதனைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு அவர்கள் புரிந்துகொள்ளாதுபோனால், தமிழ் மக் களின் உரிமைப் போராட்டப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் பௌத்த-சிங்கள அரசின் நோக்கம் நிறைவேற்றப்பட்டுவிட்டதாகி விடும். அதாவது, தமிழ் பேசும் மக்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு அடிமைப்பட்டு வாழ்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

தமிழ் பேசும் மக்களின் ஒரு தரப்பிலுள்ள சிலர், தமிழ்மக்கள் தமது உரிமைக்கு மாறாகச் செயற்படுவதாகவும், தம்மீது மேலாதிக் கத்தைத் திணிக்க முற்படுவதாகவும் பிரச்சாரத்தில் ஈடுபடுவதுண்டு. ஆனால், உண்மை அதுவல்ல. அது நடைமுறையில் சாத்தியப் பாடானதும் அல்ல. ஏனெனில், ஒரு மக்கள் கூட்டத்தின் மீது அதிகாரம் செலுத்துதல் என்பது சாத்தியப்பாடானதொன்றல்ல.

ஆகையினால், தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் வேண்டும். அதாவது தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டமே அனைத்துத் தமிழ்பேசும் மக்களினதும் உரிமையைப் பெற்றுத் தர உதவக்கூடியதாகும். தமிழ்மக்களின் உரிமைக்கு எதிராக எத்தரப்பாயினும் மேற் கொள்ளும் எந்த நடவடிக்கைகளையும் தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை களாகவே இருக்கும்.




# தேர்தலுக்கு முகம் கொடுக்கக் கூடியவகையில் சுதந்திரக்கட்சியை மறுசீரமைக்க ஏற்பாடு

### – உயர்மட்டக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அடுத்த தேர்தலுக்கு முகம் கொடுக் கக் கூடிய வகையில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் முன்னாள் சனாதிபதியு மான சந்திரிகா குமாரதுங்க மற்றும் சனாதிபதி மகிந்தராஜபக்ஷ ஆகி யோர் தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சியின் உயர் மட்டக் குழுக் கூட்டத்திலேயே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த தேர்தலின் போது கட்சி யினரின் செயற்பாடுகள் மற்றும் புதிய வேட்பாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பாகவும் புதிய அமைப்பாளர் கள் தேர்ந்தெடுப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்காக தேசிய பேரவை ஒன்று அமைப்பது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேரவை ஊடாகவே புதிய வேட்பாளர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

இந்தப் பேரவையில் முன்னாள் சனாதிபதியும் தற்போதைய சனாதி பதியும் அங்கம் வகிக்க உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டக் குழுக்கூட்டத்தில் பாராளு மன்றத்தில் காலியாக உள்ள தேசி யப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது தொடர் பாகவும் பேசப்பட்டுள்ளது.

டளஸ் அழகபெரும, ரெஜி னோல்ட் குரே,சந்தன கத்திரியாராச்சி ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக் கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# மகிந்தவின் வரவு -செலவுத் திட்டத்தில் ரூ 20 ஆயிரம் கோடி துண்டு விழும் தொகை

### மக்களை வெகுவாகப் பாதிக்குமென ஐ.தே.க எச்சரிக்கை

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையை நிவர்த்தி செய்வதற்கு கட்டாயமாக அதிக அளவிலான பணத்தை அச்சிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித் துள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் இருபதாயிரம் கோடி ரூபா துண்டு விழுந்துள்ளதாக ஐக்கிய. தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட இறுதியில் இத் தொகை முப்பதாயிரம் கோடி ரூபா வினால் அதிகரிக்கக் கூடிய வாய்ப் புக்கள் உள்ளன.

நிதி நிலைமையை சீர் செய்யும் நோக்கில் மேலதிகமாக பணம் அச் சடிக்கப்பட்டால், எதிர்வரும் 2006 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், பாரிய பண வீக்கத்தையும், வாழ்க் கைச் செலவின் தாக்கத்தை மக்கள் எதிர் கொள்ளும் சக்தியை இழப்பர்.

இது தவிர அடுத்த வருட நடுப் பகுதியில் அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 108 ரூபாவால் அதிகரிக்கலாம்.

இலங்கை ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடையும் அதேவேளை, பெறப்பட்ட கடன்களின் வட்டியும் அபரிதமாக அதிகரிக்கும்.

மொத்தத்தில், இலங்கை மக் களின் தலையில் பாரிய சுமையை ஏற்க வேண்டியநிலை ஏற்படும் என்று கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவின் கூற்றுக் குறித்து, பிரதி நிதியமைச்சர் ரஞ்சித்சியம் பலாபிட்டிய கருத்துத் தெரிவிக்கை யில்,

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ள கருத்துக்கள் அடிப்படையற்றவை.

எமது அரசாங்கம் உரிய ஆக்கபூர் வமான திட்டங்களுடனேயே வரவு-செலவுத்திட்ட பிரேரணைகள் சமர்ப் பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய எமது அரசாங்கம் உரிய சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

மத்தியவங்கிக்கு வழங்கப் பட்டுள்ள பணிப்புரைக்கமையவே எமது நிதி தொடர்பான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். (32)

# பொலிஸ் சேவையை மறுசீரமைத்து மக்களுக்கு திறன்மிக்க சேவையளிக்கப்படும்

### – ஆலோசகர் கொட்டகதெனிய கூறுகிறார்

(கொழும்பு)

பொலிஸ் சேவையை நவீன மயப்படுத்தி மக்களுக்கு திறன்மிக்க சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின், பொலிஸ் துறை சார்ந்த ஆலோசகராக நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார்.

36 வருட பொலிஸ் அனுபவத்தைக் கொண்டுள்ள தான் இந்த சேவையின் தற்போதைய தேவைகளை இலகுவாக இனம் கண்டு, பொலிஸ் சேவை எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் மறுசீரமைக்க வுள்ளதாகவும் தெரிவித்தார். (32)

# ஈழத்தமிழர்கள் நலனைப் பாதிக்கும் செயல்களுக்கு இந்தியா துணை போகக்கூடாது

### யாழ். உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் வலியுறுத்து

ஈழத்தமிழர்கள் நலனைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடு களைக் முன்னெடுத்துச் செல்ல சிறிலங்கா அரசிற்கு இந்தியா துணை போகக் கூடாது என யாழ்.மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாண வர் அமையம் வலியுறுத்தியுள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நேற்று அனுப்பிவைத் துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது;


தமிழர் தாயகத்தின் வலிகாமம் வடக்கிலுள்ள விமானப்படைத் தளத்தைப் புனரமைப்பதற்கான அனுசரணை யினைத் தங்கள் நாடு சிறிலங்கா வுக்கு வழங்குவதையிட்டு அதிர்ச்சியடைகின்றோம். இராணுவ நோக் கத்தை நலனை மட்டும் கருத்திற் கொண்டு சிறிலங்கா அரசு மேற் கொள்ளும் இந்த நட வடிக்கைக்கு இந்தியா துணை போவது ஈழத்தமிழர் களை மிகமோசமாகப் பாதிக்கும் என் பதனை நாம் சுட்டிக்காட்ட விரும் புகின்றோம்.

பலாலி விமானத்தளத்தை விஸ் தரிப்பதோ புனரமைப்பதோ பயணி களின் விமானப்போக்குவரத்துக்காக அல்ல என்பதனையும், அதுதமிழர் தாயகத்தில் குறிப்பாக குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினரது தேவைக்காகவே என்பதையும் தாங்கள் அறிவீர்கள். இது பலவீனம் அடைந்திருக்கும் சிறிலங்காப் படை களை மேலும் வலுப்படுத்தி தமிழ் மக்களுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்தவே துணைசெய்யும் என்று நாம் திடமாக நம்புகின்றோம். இது இப்போது ஆட்டம் கண்டிருக்கும் இலங்கைத்தீவின் சமாதானத்தையும் உடன் சாய்த்து விழுத்துவதற்கு ஏது வாக அமையும்

ஏற்கனவே பலாலி விமானப் படைத்தளத்தை சிறிலங்காப்படைகள் இராணுவத்தளமாகவும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை உயர்பாதுப்பு வலயமாகவும் வகைப்படுத்திக் கொண்டிருப்பதனால் முப்பதாயிரத்திற் கும் மேற்பட்ட குடும்பங்களை இன்னும் அகதி முகாம்களில் இருக்கின்றன. சுமார் இருபது வருடகாலமாக நீடிக் கும் இந்த மக்களின் துன்பியல் வாழ்வு முடிவுக்கு வரவில்லை.

இந்த நிலையில் மேலும் பலாலி விமானத் தளத்தை விஸ்தரிப்பது பாதிக்கப்பட்ட மக்களை இன்னும் நீண்டகாலத்துக்கு தவிக்கவிடுவதோடு மேலதிகமாகப் பல ஆயிரம் மக்களை குடியெழுப்பவும் துணை போய் விடலாம் என்று அஞ்சுகின்றோம். யாழ். குடாநாட்டிலுள்ள உயர்பாது காப்பு வலயங்கள் நீக்கப்பட வேண்டும் என்றுதமிழ் மக்கள் எல் லோரும் விரும்புகின்ற நிலையில் அதற்கு முரணாகச் செயற்படும் சிறி லங்கா அரசுக்கு இந்தியா துணை போவது சரியானதல்ல. இது தமிழ் மக்களின் அதிருப்தியை சம்பாதிப்ப தாக அமையும்.

கடந்த தசாப்தத்தின் கசப்பான அனுபவங்களை மறந்து செயற் படுவதற்கு தமிழ்மக்கள் விரும்புகின்ற சூழ்நிலையில் இவ்வாறானதோர் நடவடிக்கை அதற்கு ஒருபோதும் உறுதுணையாகமாட்டாது. ஆகவே ஈழத்தமிழ் மக்களின் நலன்களையும் கருத்திற்கொண்டு சிறிலங்கா அர சுக்கு பலாலி விமானத்தளத்தை விஸ்தரிக்கும் கபடநோக்கத்திற்கு துணைபோகாதிருக்குமாறு அனைத் துத் தமிழ்மக்கள் சார்பிலும் கேட்டுக் கொள்கின்றோம்.



இந்திய கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதி வைஸ் அட்மிரல் சுரேஸ் மேத்தா நேற்று முன்தினம் கொழும்பு வந்துள்ளார். நேற்று அவர் சிறிலங்கா கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரண்ண கொடவை கடற்படைத் தலைமையகத்தில் சந்தித்தார்.

# மகிந்தவின் பாதுகாப்பிற்காக கொழும்பின் 10முக்கிய வீதிகள் நேற்று மூடப்பட்டன!

### –மக்களின் இயல்புவாழ்க்கை பாதிப்பு

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்காக நேற்றுமாலை கொழும்பிலுள்ள பத்து முக்கிய வீதிகள் திடீரென மூடப்பட்டதால் பெரு மளவான மக்களும், பாடசாலைப் பிள்ளைகளும் பலத்த சிரமங்களை அனுபவித்தனர்.

இலங்கை ஐ.நா.உறுப்புரிமை பெற்று ஐம்பது ஆண்டுகளைப்பூர்த்தி செய்துள்ளதை முன்னிட்டு நேற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் கலந்துகொள்ள சனாதி பதி மகிந்தராஜபக்ஷ சென்றிருந்தார்.

இதனையடுத்து கொள்ளுப் பிட்டியிலிருந்து பொரளை வரையான பத்து முக்கிய வீதிகள் மாலை மூன்று மணிநேரம் சகல போக்குவரத்து களுக்கும் மூடப்பட்டன.பொலிசாரும், படையினரும் இணைந்து இந்த வீதிகளூடாகப் பயணம் செய்ய எந்த வொரு வாகனத்தையும் அனுமதிக்க வில்லை.

இப்பகுதியில் பிரபல கல்லூரி கள் பல அமைந்திருப்பதால் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை எழுதச் சென் றிருந்த மாணவர்கள் பெரும் சிரமங் களை அனுபவித்திருந்தனர். அமைச் சுக்களிலும் நிர்வாகச் செயலகங்களி லும் நேற்று மாலை ஏற்பாடு செய் யப்பட்டிருந்த பல கூட்டங்கள் இரத் துச் செய்யப்பட்டன.

இவ்வீதித் தடையால் பாதிப்புற்ற ஒருவர் கருத்துக்கூறுகையில்; "முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் படையினர் இதனை ஒரு இலகுவான நடைமுறையாக கொண்டிருக்கின்றனர். ஆனால் மக் களைப் பற்றியார் சிந்திக்கின்றனர்? எனக் கோபத்துடன் கேட்டார்.

மகிந்தராஜபக்ஷவுக்கு கடந்த தேர்தலில் வாக்களித்த ஒருவர் டுப்பி ளிக்கேசன் பகுதியில் மூன்று மணி நேரம் காத்திருக்க நேர்ந்தது. அவர் இது குறித்துக்கருத்துத் தெரி விக்கையில்; "எமது பிரச்சினையை சனாதிபதி விளங்கிக்கொண்டு கொழும்பின் இதயப்பகுதியில் போக்குவரத்தை இவ்வாறு தடை செய்வதைத் தடுப்பார் என உண் மையிலேயே நம்புகிறேன்" எனத்தெரி வித்தார்.

## இருவர்..

(வயது - 22), தம்பிமுத்து தவராசா (வயது -29) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பிரதேசத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்தே இக்கொலைகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சிறுமியை..

தால் குறித்த படையினர் தனது முயற்சியைக் கைவிட்டு முகாமிற்கு ஓடிவிட்டார்.

எழுதுமட்டுவாள் வடக்கு மருதங் குளம் பகுதியில் உள்ள 555ஆவது படைமுகாம் அமைந்துள்ள வீதியூடாக இச்சிறுமி சென்று கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் ஆத்திரமுற்றுள்ள அப்பகுதி மக்கள் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், போர்நிறுத்தகண்காணிப்புக்குழு, மனிதவுரிமைகள் ஆணைக்குழு மற்றும் யுனிசெவ் என்பனவற்றில் முறையிட்டுள்ளனர். (33)

## வவுனியா..

ணாள் புளொட்உறுப்பினர்களும் இணைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில்இரண்டு தமிழ் இளைஞர்களை நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரும் புளொட்உறுப்பினர்களும் இணைந்து கைது செய்தி ருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## குடாநாட்டில்..

படை நிலைமைகளைச் சேர்ந்த படையினர் வீதியூடாகச் செல்லும் மக்களை கடும் சோதனைகளுக்குட்படுத்தி வருவதாகச் செய்திகள் தெரி விக்கின்றன.

கோண்டாவில் சந்தி ஆலடிச்சந்தி, உரும்பிராய்ச் சந்தி,ஊரெழுச் சந்தி, பரமேஸ்வராச்சந்தி ஆகிய பகுதிகளில் உள்ள படையினர் மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகளை தீவீரப்படுத்தியதாகத் தகவல்கள் கூறுகின்றன.

யாழ். தென்மராட்சி, மீசாலை கெருடாவில் பகுதியிலும், கொடிகாமம் வறணிப் பகுதியிலும், சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. காலை 6.00 மணி முதல் முற்பகல் 9.00 மணிவரை இந்தச் சுற்றி வளைப்பு தேடுதலில் படையினர் ஈடுபட்டுள்ளனர். வீடுவீடாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் அங்கிருந்தோரையும், கடும் விசாரணைகளுக்குட்படுத்தியுள்ளனர். இந்தச் சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது எவரும் கைது செய்யப்படவில்லை. (கீ.37.33)

## குடாநாட்டில் படை..

அத்துடன் மக்கள் நடமாட்டம் அதிகரித்த சந்தை வீதிகள், கல்வி நிலையங்கள், பாடசாலைகள் போன்ற இடங்களில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு அச்சமூட்டும் வகையான செயற் பாடுகள் தீவிரப்படுத்தப்படுகிறது.

அங்கு வாழும் மக்களின் நலன் களில் மனிதஉரிமைகள் எதனையும் மதிக்காது மக்கள் மீது மேற் கொள்ளப்படுகின்ற இராணுவக்காட்டு மிரண்டித்தனமான செயற்பாடுகள் விரிவுபடுத்தப்டுகின்றன. இதனால் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்து வரு கின்றது.

பெருந்தொகையான மக்கள் வாழ்கின்ற நிலப்பகுதிகளில் படை யினர் வெறுமனமே தமது நலன்க ளையும்,பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு தமது இராணுவ நட வடிக்கையைச் செயற்படுத்தி வருகின்றது.

மக்கள் மீதான இத்தகைய நெருக்குவாரங்களுக்கு பொது அமைப்புகளும்,மக்கள் பிரதிநிதி களும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர். இனிவரும் காலங்க ளிலும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்றால் அதற்கான எதிர்ப்புப் போராட்டங்களையும் மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (கு)

## அசாதாரண..

றையும் ஒப்படைக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கை அரசு தற்போது இந்திய அரசைநாடியுள்ள இந்த நிலையிலேயே அமெரிக்காவால் மிக முக்கிய பொறுப்பு நிக்போர்ண்ஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவர் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூபுஷ்சிற்கு மிக நெருக் கமானவர் என்பதுடன் வெகு விரை வில் அமெரிக்க அரசாங்கத்தின் இராஜாங்க செயலராக நியமிக்கப் படக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## சிறிலங்கா...

பேச்சாளராக பிரிகேடியர் எஸ்.ஏ.பி.சமரசிங்கவும், யாழ். கட் டளைத் தலைமையகப் பணியில் பிரி கேடியர் என். விதாரனகேயும், இராணுவ முன்னரங்கப் பகுதி கண் காணிப்புத் தளபதியாக - பிரிகேடியர் பி.சந்திரவன்சவும் நியமிக்கப்பட்டுள் ளர். இராணுவ தலைமையகத்தின் தலைமை இயக்குநர் - மேஜர் ஜெனரல் டி.டபிள்யூ.ஜெயவர்த்தன, மேஜர் ஜெனரல்கள் என்.ஏ. ரணசிங்க மற்றும் பி. பன்னிபிட்டிய ஆகியோரும் சிறிலங்கா இராணுவ தலைமையகப் பணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடக்கு-கிழக்கில் படைப்பிரிவுகளுக்கு புதிய அதிகா ரிகளை புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன் சேகா நியமித்துள்ளார். யாழ். 51 ஆவது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிபிட்டிய இராணுவத் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டு அவரின் இடத்திற்கு கெமுனு படைப்பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் லெனார்ட் மார்க் நிய மிக்கப்பட்டுள்ளார். வவுனியா 56 ஆவது படைப்பிரிவு தளபதியாக மேஜர் ஜெனரல் நிரஞ்சன் ரணசிங்க இராணுவத் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டு அந்த வெற்றிடத்திற்கு பிரிகேடியர் ஜகத் டயஸ் நியமிக் கப்பட்டுள்ளார். கஜபாகு படைப்பிரிவு அதிகாரியான டயஸ் தற்போது மட்டக்களப்பு 233 ஆவது படை யணித் தளபதியாக உள்ளார். வெலிக்கந்தை 23 ஆவது படையணித் தளபதி பிரிகேடியர் தயா இரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த ஒருவருட காலமாக இராணுவ ஊடக இயக்குனராகவும் ஊடகப் பேச்சாளராக இருந்தார். 23 ஆவது படையணித் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் திஸ்ஸ ஜயவர்த்தன இராணுவ பொது நட வடிக்கைகள் இயக்குனர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது இராணுவப் பேச்சாளரா கவும் ஊடக இயக்குனராகவும் இருக் கும் பிரிகேடியர் நளின் விதாரனகே வன்னிப் பாதுகாப்புத் தலைமை யகத்தின் பிரதான படைகளின் பிரிகேடியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பலாலி..

தென்இந்திய தளபதி லெப். ஜெனரல் தாக்கரின் சிறிலங்காப் பயணம் குறித்தும் இந்திய கிழக்குப் பிராந்திய தளபதி வைஸ்அட்மிரல் சுரேஸ் மேத்தாவின் பயணம் குறித்தும் இந்திய அமைச்சரிடம் பேசினேன்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் பலாலி விமான தள சீர மைப்புக்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டபோதே எனது கடுமையான ஆட்சேபனையை இந்திய அரசிடம் தெரிவித்தேன். இந்த விமானத்தளம் சீரமைக்கப்பட்டால் அது தமிழர்கள் மீது குண்டு வீசு வதற்குத்தான் பயன்படும் என்ப தையும் சுட்டிக்காட்டினேன்.

கடந்த நவம்பர் 28ஆம் நாளன்று இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோன்சிங்கிடமும் 29ஆம் நாளன்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சரிடமும் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து விரிவாக விவா தித்தேன். சிறிலங்கா சனாதிபதி மகிந்தராஜபக்ஷ இந்தியா வரு வதற்கு முன்னதாக மீண்டும் இந்தியத்தலைவர்களை நான் சந்திக்கவுள்ளேன்.

இந்திய-சிறிலங்கா இராணுவ கூட்டுப் பயிற்சி நடவடிக்கை தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் விளக்கம் கோரினேன். பாகிஸ்தான் தவிர்த்த தெற்காசிய நாடுகள் பலவற்றுடன் மேற்கொள்ளும் ஒரு கூட்டு நட வடிக்கை இது என்று பிரணாப் முகர்ஜி கூறினார்.

இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து இந்திய அரசியல்கட்சியின் இதர தலைவர்களுடன் நான் விரை வில் சந்தித்து விளக்கம் அளிக்க வுள்ளேன். சிறிலங்காவில் சீனாவும் பாகிஸ்தானும் தளம் அமைப்பதைத் தடுக்க இந்தியா தலையிடவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நிச்சயம் தமிழர்களுக்கு எதிரானதாகத்தான் அது அமையும். இந்தியாவில் உள்ள தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் தொப்புள்கொடி உறவு உள்ளது. இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவில் உள்ள தமிழர்கள் அக்கறையோடு உள்ளார்கள்.

இலங்கைப் பிரச்சினையின் அடிப்படையான தமிழர்தாயகத்தை பகிரங்கமாக நிராகரிப்பது என்பது மறைந்த முன்னாள் இந்திய தலைமை அமைச்சர் இந்திராகாந்தி அம்மையார் மேற்கொண்ட உறுதி யான நிலைப்பாட்டுக்கு நேர் முரணானது தமிழர் தாயகக் கோட்பாடு திம்பு பேச்சுவார்த்தையில் ஏற்கப்பட்ட ஒன்று.

இலங்கைத்தீவிலே போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. தங்க ளுக்குச் சாதகமாக இந்தியாவை வளைக்க சிறிலங்கா முயற்சிப்பது மிக ஆபத்தானது.

இரு நாட்டு கொள்கை வகுப்பாளர்கள் உருவாக்க நினைக்கும் இராணுவ ஒப்பந்தத்தை இந்தியத் தலைவர்கள் முன்னெடுக்கக் கூடாது எனக் கூறினார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.